விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து


சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 14 புதன்கிழமை (28.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 191

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# பழைய சம்பவங்களை மறந்துவிட்டு புதிய கண்ணோட்டத்துடன் அணுகுங்கள்



## இந்திய அரசிடம் பாலசிங்கம் வேண்டுகோள்

(புதுடில்லி)

பழைய சம்பவங்கள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு இலங்கை இனப்பிரச்சினையை ஒரு வித்தியாசமான கண்ணோட்டத்துடன் அணுகுமாறு இந்திய அரசையும் இந்திய மக்களையும் விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

இந்தியத்தொலைக்காட்சியான என்.டி.ரி.விக்கு செவ்வியளித்த அன்ரன் பாலசிங்கம் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

ராஜீவ்காந்தியின் மரணம் மிகவும் வருத்தத்திற்குரிய நிகழ்வு. அதற்காக மிகவும் வருந்துவதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

1991 இல் இடம் பெற்ற அச் சம்பவத்தைக் கூறுவதானால் அது மிகவும் ஒரு துரதிஷ்டவசமான நிகழ்வு. வரலாற்றில் மிகப்பெரியதொரு[illegible]. அதற்காக நாங்கள் மிகவும் மனம் வருந்துகின்றோம்.

இந்திய அரசும் இந்திய மக்களும் இந்நிகழ்வை பெரிய மனதுடன் மன்னித்து கடந்த காலத்தைப் புறந்தள்ளி இலங்கை இனப்பிரச்சினையில் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராஜீவ் காந்தியின் மரணத்தையடுத்து கடந்த 15 ஆண்டுகளாக மௌனமாக இந்தியா இருந்து வருவதாகவும் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா நடுநிலையான பங்கினை வகிக்கவேண்டுமெனவும் பாலசிங்கம் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் இந்திய அரசுடன் புதியதொரு உறவைக்கட்டியெழுப்பத் தயாராகியுள்ளதாகவும் இந்தியாவின் பிராந்திய நலன்களிற்கு எதிராக விடுதலைப்புலிகள் எதனையும் எப்போதும் இனிமேல் செய்யமாட்டார்கள் என்ற உறுதிமொழியை தாங்கள் இந்திய அரசுக்குத் தெரிவித்துள்ளதாகவும் மேலும் அச் செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் நடுவர்நிலை வகிக்கவிரும்பினால் அது விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கவேண்டுமென பேட்டியாளரின் கேள்வி ஒன்றிற்கான பதிலில் தெரிவித்த பாலசிங்கம் அவர்கள் அண்மையில் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் ,ஆயுதப்படைகள் மக்களைக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக முதல்வர் கருணாநிதிக்கு நட்புக்கரம் நீட்ட புலிகள் தயார்

## சு.ப.தமிழ்ச்செல்வன் செவ்வி



(சிங்கப்பூர்)

ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு நட்புக்கரம் நீட்ட தமிழீழவிடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் தமிழ் முரசு நாளேட்டிற்கு அவர் வழங்கிய நேர்காணலின்போதே இத்தகவலை அவர் வெளியிட்டுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)



# பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால் நாடாளுமன்றத்தை கலைத்துவிடுங்கள்

## ஜனாதிபதியிடம் எஸ்.பி.கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாவிட்டால் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடாத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்க இக்கோரிக்கையை விடுத்துள்ளார். கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியிடம் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பில் உறுதியான கொள்கை எதுவும் இல்லையென எஸ்.பி. திஸநாயக்க குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் தமிழீழத்தை நோக்கிய முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஊடகமாநாட்டில் கருத்துத்தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தாக்குதல் போராளி உயிரிழப்பு

(திருகோணமலை)

மட்டக்களப்பு வாகரையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது துணை இராணுவக் குழுவினர் நடத்திய தாக்குதலில் போராளியொருவர் உயிரிழந்தார்.

விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான திருகோணமலை உள்ள வாகரை கிருமிச்சைப் பகுதியில் (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

தரம் –5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நீர்சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தும் நிகழ்வு

(துன்னாலை)

குவைத் செம்பிறைச் சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தும் அங்குரார்ப்பண நிகழ்வு கரவெட்டி அத்துளு குடிநீர் விநியோக திட்ட பணிமனையில் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகயாழ்.அரசஅதிபர்கே.கணேஷும் சிறப்பு விருந்தினராக மேற்படி சுத்திகரிப்பு இயந்திரத்தை வழங்க முன்நின்று உழைத்தவரும் தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பிரதிப்பணிப்பாளருமாகிய சூரிப்பிள்ளை பாலச்சந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ். தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர் ரி.பாரதிதாசனும் கலந்து கொள்ளவுள்ளார். மேற்படி சுத்திகரிப்பு இயந்திரத்தினால் சுத்திகரிப்பு செய்யப்பட்டு பெறப்படும் நீரானது கரவெட்டி பிரதேசத்தில் உள்ள குடிநீர் பாவனையாளர்களுக்கு குழாய் மூலம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே பாவனையாளர்கள் ஒரு குடிநீர் பெறும் கம்பத்திற்கு மாதம் 480ரூபா கட்டணமாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்திவருகின்றனர். தினமும் அரை மணி நேரம் குடிநீர் வழங் கப்பட்டு வருகிறது. (க-101)

# அனுசரணைப் பணியிலிருந்து நோர்வே வெளியேறாதாம்

## பெளயர், சொல்ஹெய்ம் தெரிவிப்பு

இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வே தொடர்ந்தும் ஏற்பாட்டாளராக தொழிற்



படுமென்று நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் ஜோன் ஹன்சன் பெள்யர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உயர்நிலை இராணுவ அதிகாரி மீதான தற்கொலை தாக்குதலின்பின் கருத்து வெளியிட்ட அவர் இலங்கையின் துக்கரமான சூழ்நிலைகளாயினும் சந்தோஷகரமான நிலைமைகளாயினும் நோர்வே தொடர்ந்து தனது பங்களிப்பைவழங்குமென கூறினார்.

இதேவேளை நோர்வேயின் வெகுஜன வானொலி ஒன்றுக்கு செவ்வியளித்த அந்த நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெம், எத்தகைய சூழலிலும் நோர்வே வெளி யேறும் என்ற பேச்சுக்கே இடமில்லை என தெரிவித்திருக்கின்றார்.



குறிப்பாக இலங்கையில் தொடர்ச்சியான பிரச்சினைகள் உள்ளன. அதிலும் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவதே அதிகமாக இருப்பதாக தெரிவித்த அவர் அவர்களின் நலன் கருதி தமது எல்லையற்ற ஆதரவு தொடரும் என் தெரிவித்திருக்கிறார். (க-7)

# வேலூர் சிறையில் முருகன் மீண்டும் உண்ணாவிரதம்

(வேலூர்)

ராஜீவ் காந்தி கொலையாளிகள் முருகன் - நளினி இருவரும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். முருகன் வேலூர் ஆண்கள் சிறையிலும் நளினி பெண்கள் சிறையிலும் உள்ளனர். இவர்களின் மகள் இலங்கையில் வளர்கிறாள்.

நளினி முருகன் இருவரும் தங்கள்மகளை தமிழ்நாட்டில்படிக்க வைக்க விரும்புகிறார்கள். இதற்காக மகளுக்கு விசா வழங்க வேண்டும் என்று நளினியும் முருகனும் 6 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதற்கிடையே விசா வழங்க ஏற்பாடு செய்யப்படும்என்று இலங்கை அரசு அறிவித்ததாக உறவினர்கள் மூலம் நளினிக்கு தகவல்தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து முருகனும் நளினியும் உண்ணா விரதத்தை கைவிட்டனர். ஆனால் இலங்கை அரசிடம் இருந்து அதிகாரபூர்வ அறிவிப்பு வரவில்லை.

இதைத் தொடர்ந்து முருகன் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் உண்ணாவிரதத்தை தொடங்கினார். (க)

# தினமும் 15 சேவைகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையிலிருந்து தினமும்வழி இல777,780ஆகியவற்றால் 15 போக்குவரத்து சேவைகள் நடைபெறுவதாக ஊர்காவற்றுறை சிற்றூர்தி சேவைச் சங்கத் தலைவர் வி.ஞானசம்பந்தர் தெரிவித்தார்.

காலை 6.30 மணிக்கு செல்லும் சிற்றூர்தி சேவை வழி இல. 777 பாதையால் சென்று திரும்ப வழி இல.780 பா்தையால் வர வேண்டும் எனவும் இது கட்டாய சேவை காலை 7.30 மணிக்கு என்றும்தெரிவித்தார். (க-7)

# பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

முத்துவேலு வைத்திலிங்கம்
631, முஸ்லிம் கல்லூரி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

வழக்கு இல: மணநீக்கம் /625 - வழக்காளி

எதிர்

வைத்திலிங்கம் பெண் கந்தையா
மகள் யமுனா
மே/பா.கமல் கடை,
நேசன் குடியிருப்பு, 1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு)
- எதிராளி.

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் ஆஜராக இருக்கவும், இன்று ஒரு முக விளக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு அமைய எடுத்துக்கொள்ளப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ1 ஆவணம், வழக்காளி மன்றில் இன்று அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து, வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக்கண்டு,

எதிராளி முரளிதரன் என்ற நபருடன் சோரவாழ்க்கை வாழ்வதாலும், 2002ஆம் ஆண்டு ஆடி மாதத்திலிருந்து வழக்காளி யையும் பிள்ளைகளையும் பிரிந்து வன்மமாக உறவறுத்து வாழ்ந்து வருவதாலும், வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 12.07.1991 இல் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை ரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாகுமென்று இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது.

வழக்காளி தமது பிராதிலும், இன்று மன்றுக்கு அளித்த சாட்சியத்திலும் எதிராளியின் சோரவாழ்க்கை, பற்றிக் குறிப்பிட்டதை கவனத்திற்கு எடுத்து எதிராளிக்கும் வழக்காளிக்குமிடையே நிறைவேறிய திருமணத்தின் மூலம் பிறந்த விவேக், வினோ, விஜிதரன் ஆகிய மூன்று பிள்ளைகளின் பாதுகாப்பும், பராமரிப்பும் தொடர்ந்தும் பிள்ளைகளின் தந்தையாரான வழக்காளியிடமே இருக்க வேண்டும் எனவும் கட்டளையிடப்பட்டு இதனால் பின்னுறுதித் தீர்வையளிக்கப்படுகிறது.

இப்பின்றுதித் தீர்வையின் பிரதி 'வலம்புரி' தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் பதிற் சேவகமாக எதிராளிக்குச் சேவிக்கப்பட்டு மூன்று மாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை எதுவும் அனைக்காத பட்சத்தில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வை ஆக்கப்படும்.

2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆம் திகதி.

*மாவட்ட நீதிபதி*
*இ.த.விக்னராஜா*

நீதிமன்றக் கட்டளைப்படி,
து.சிறீமோகன்
பதிவாளர்.
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

*வரைபு*
*வழக்காளியின் சட்டத்தரணி.*
*பவானி சற்குணராசா.*

(458)

# இராசிபலன்

28.06.2006
(ஆனி 14, புதன் கிழமை)
திருதியை பின்னிரவு 12.15 மணிவரை
பு,சம் முன்னிரவு 8.08 மணிவரை
இராகுகாலம் 11.55-1.25மணிவரை
சுபநேரம் 4.25-5.55 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ஆரோக்கியக்குறைவு, எடுத்த காரியம் கைகூடும், மனப்பயம், கல்வியில் ஆர்வம். |
| இடபம் | பரயாண சுகம், கூட்டு முயற்சி, உறவினா வருகை, மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | விவாதம், எடுத்தகாரியம் தாமதமாகும், பணவிரயம், உஷ்ணநிலை. |
| கடகம் | பெரியோர் ஆதரவு, தேகநலன், சயன சுகம், நல்ல முயற்சி. |
| சிங்கம் | மனக்கிலேசம், சயனசுகக்குறைவு, சுப செலவு, எடுத்த காரியம், தாமதமாகும். |
| கன்னி | சந்தோசமான நிகழ்வு தொழில் வருமானம், காரிய அனுகூலம், கீர்த்தி. |
| துலாம் | நல்ல செய்தி, அதிக பிரயாசை, அதிகாரம், போசனசும். |
| விருச்சிகம் | புதிய முயற்சி, திடீர் பயணம், அச்சமான நிலை, கட்டுப்பாடு. |
| தனுசு | காரிய தடங்கல், மரியாதைக்குறைவு, ரோகநிலை, வாகனபயம். |
| மகரம் | சௌக்கிய விருத்தி, காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, பணவருவாய். |
| கும்பம் | காரிய அனுகூலம், சத்துருஜெயம், ரோகநிலை, மனமகிழ்ச்சி. |
| மீனம் | வியாபார விருத்தி, சிறு வியாதி, கௌரவக்குறைவு, நல்ல முயற்சி. |

- வளவன்

# மருதமடுநாயகி வருடாந்த பெருவிழா

(மன்னார்)

மன்னார் மருதமடு செபமாலை நாயகியின் வருடாந்த பெருவிழா கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மன்னார் குருமுதல்வர் அ.சேவியர் குரூஸ் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவனாட்கள் நடைபெற்று வருகின்றது.

ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் வசதிக்காக வடபிராந்திய போக்குவரத்து சேவை திருநாள் அன்றும் முதல் நாளும் விசேட சேவைகளை நடாத்தவுள்ளது. (க-72)

# படையினரின் கெடுபிடிகளால் அபிவிருத்திப்பணிகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

படையினரின் கெடுபிடிகளை அடுத்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறையின் இரு பிர பல பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வந்த நிர்மாணப்பணிகளை இடைநிறுத்த சர்வதேச உதவியமைப்பான சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் ஆலோசித்து வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமி மற்றும் கடந்த கால யுத்த அனர்த் தங்களினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் எஸ்.டி.சி.என்றழைக்கப்படும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனமும் பங்கு பற்றி வருகின்றது.

இவ் வகையினில் பருத்தித்துறை உயர்பாது காப்பு வலயப் பகுதியினுள் அமைந்துள்ள ஹாட்லிக்கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைகளில் கட்டட நிர்மாணப்பணிகளை இவ்வாண்டில் அவ்வமைப்பு ஆரம்பித்திருந்தது.

எனினும் குறித்த கட்டட நிர்மாண பணிகளில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் வேலைத்தளங்களிற்கு அனுமதிக்க படையினர் தற்போது மறுத்துவருகின்றனர்.

அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் புதிய கட்டடங்களை அமைக்கவும் அனுமதி மறுத்து வருகின்றனர். இந்நிலையில் படையினரின் இக்கெடுபிடிகள் குறித்து அரச அதிபரினதும், கல்வி அதிகாரிகளினதும் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கும் அந்நிறுவனம் யாழ்.மாவட்ட படைத்தலை மைக்கும் இது தொடர்பாக அறிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

இவ்வாறானதோர் சூழல் நீடிக்கப்படுமிடத்து தமது பணிகளை இடைநிறுத்த வேண்டிவரலாமெனவும் அவ்வமைப்பு எச்சரித்துள்ளது. (க-9)


அருள் மிகு சுன்னாகம் மயிலணி
கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்



8 ஆம் நாள் 28.06.2006
(காராம்பசுத் திருவிழா)



தேராக என்னுளத்தைத் தேர்!

தேடும் அடியவரின் தீவினைகள் தீர்த்துவைத்தே
நாடும் திருவருளை நல்கிடும் நீ - நாடுவக்கச்
சீராக ஏறவரும் செந்தூர் மயிலணியின்
தேராக என்னுளத்தைத் தேர்!

சிற்பி

# காணாமற் போனவர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

1996/1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் காணாமற் போனவர்கள் என முறைப்பாடுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல், காணாமற்போனவர்கள் பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு வின் பொறுப்பதி காரியால் வெளியிடப் பட்டுள்ளது.

காணாமற் போனவர்கள் சம்பந்தமான விசாரணைகளுக்காக காணாமற் போனோரின் தாய், தகப்பன், பாதுகாவலர் முறைப்பாட்டுக்காரர் அல்லது சாட்சியாளர்களில்எவரேனும்கடிதமூலமாகவோ அல்லது கிராம சேவகர் அல்லது பிரதேச செயலர் மூலமாகவோ அல்லது 011 2321836 என்னும் தொலைபேசி இலக்கம் மூலமாகவோ விசாரணை உத்தியோகத்தர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொள்ளலாம் எனவும் பொறுப்பதிகாரி, காணாமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவு, இல. 101, வைத்திய வீதி, கொழும்பு என்ற முகவரியுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளலா மெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவரின் பெயர் வருமாறு,

ஆசிரிநாதன் கிரிஸ்டி-ஜயநாதன் கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், ஜி.பாலகிருஷ் ணன்-கடற்கரை ஒழுங்கை, குருநகர் யாழ்ப்பாணம், (முறைப்பாடு நாகம்மா),எச்.குணாதன்- தாலன் கோவில், புள்ளையாட் கோவிலடி திருநெல்வேலி, யாழ்ப்பாணம், பரமணி சந்திரசேகரம்- இல 11/2 கொன் வொன்ட் வீதி, யாழ்ப்பாணம். (முறைப்பாட்டுக்காரர் சோபிதா).

எஸ்.தவபாலன்- கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம், சங்கர் நவசிவாயம் புவநேஸ்வரன், இல -20 சிவபிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (முறைப்பாட்டுக்காரர்சிவபாக்கியம்). சதாசிவம் சந்திரசேகரம்- கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம், சட்குணராசா பலனி-நெடுங் குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், (முறைப்பாட்டுக்காரர் சொக்கலிங்கம்), செல்லையா சசீகரன்-இல 72/45 ராஜலிங் கம் வீதி, திருநகர்யாழ்ப்பாணம், (முறைப்பாட்டுக்காரர்-தம்பி பிள்ளை).

சண்முகம் லோகேஸ்வரன் கல்வியங்காடு-யாழ்ப்பாணம், உதயகுமார் சன்முகநாதன், இல. 9/7, மலர்மகள் வீதி, அரி யாலை, யாழ்ப்பாணம், (முறைப் பாட்டுக் காரர் M.சிவபிரகாசம்), வைத்தியலிங்கம் தங்கமுத்து, புகையிரத நிலைய வீதி, கோண்டாவில், (முறைப்பாட்டுக்காரர் வி.கணேஷநாதன், ஜோன் ஜயரத்னம் -இல 303/18, சின்னட்டி, கரணவாய் மத்தி, கரணவாய்.

பரமேஸ்வரி குமுதினி-பாடசாலை ஒழுங்கை, சங்கரத்தை, வட்டுக்கோட்டை, (முறைப்பாட்டுக்காரர்-அன்னலட்சுமி), ரமேஸ்கரன் செல்லதுரை -குடுமியன்வானி, ரவீந்திரராஜா ராஜரத் னம், சாவக்காடு சுதுமலை, (முறைப் பாட்டுக்காரர் ராசலிங்கம்), சிவகுருநாதன் அருட்செல்வம் -கப்பது, ஆணைக்கோட்டை, சிவரஞ்சன் சிவபாலன்- உடுப்பிட்டி சந்தி, கொக்குவில், தம்பு மகேந்திரன்- புலோலி மேற்கு, புலோலி, தவராசா முரளிதாஸ்- சுபர்ணமலை, உடுப்பிட்டி.

தயாகுணம் தயாபரன்-அரியாலை சந்தி, சுதுமலை வடக்கு, யாழ்ப்பாணம், திருச்செல்வம் விஜயசந்திரன் -பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம், முறைப்பாட்டுக்காரர்திருசெல்வம்)த இரத்தினம் குகேந்திரன் -இல 49/A. நாகேந்திரபுரம், கைதடி.

சத்தியவான் ரமேஸ் சாந்தகுகநாதன் -மேல் பார்த்து, மிருசுவில், (முறைப்பாட்டுக்காரர் கே.சதீஸ்வரன்), சின்னதம்பி சசீகரன்- முல்லைத்தீவு, பத்மரூபன் ஞானசேகரம் - அரியாலை தெற்கு, மீசாலை, தம்பித்துரை துறைராஜா-02 ஆவது ஒழுங்கை முள்ளி வீதி, அரக்கால் மடம்.

தேவசந்திரன் தேவன்-ஆனந்த நகர் கிளிநொச்சி, திருநாவுக்கரசு சர்வேஸ்வரன்-தனங்கிளப்பு யாழ்ப்பாணம், (முறைப்பாட்டுக்காரர் திருநாவுக்கரசு)

கார்த்திகேசு விஜயன்-செருக்கம்புலம், பண்டத்தரிப்பு, மகேஸ்வரன் மாணிக்கம், ராஜகிராமம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி, நாகமணி அன்னராசா- புலுன்ருட்டி சங்கானை, பண்டத்தரிப்பு, பசுபதி-தயாணந்தன்-செம்பியன் பற்று வடக்கு, யாழ்ப்பாணம், (முறைப் பாட்டுக்காரர் எம்.பசுபதி.

பொண்ணு அழகரத்தினம்-பளை யாழ்ப்பாணம், இராசதுரை சுதாகரன், புலுன்ருட்டி, சங்கானை, பண்டத்தரிப்புத எஸ்.அம்பிகாபதி -ஏரக்கம்பத்தைவல்வெட்டித் துறை, (முறைப்பாட்டுக்காரர் ஜயந்தி அம்பிகாவதி), எஸ்.பாலகுமார்- கட்டப்பிராய் யாழ்ப்பாணம், (முறைப் பாட்டுக்காரர் பி.பிலோமினா).

எஸ்.சபேசன் -அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி, (முறைப் பாட்டுக்காரர் எஸ்.புஷ்பமலர்), தங்கராஜா குணசீலன்- பூவக்கரை, வியாபாரி மூலை, வல்வெட்டித்துறை, (முறைப்பாட்டுக்காரர் ஜி.கல்பனா), தர்மலிங்கம் சுவர்ணசீலன் - வதிரி கரவெட்டி, தர்மேஸ்வரன் காசிப்பிள்ளை- சுதா பேக்கரி வீதி, உரும்பிராய். தில்லையம்பலம் யசோதரன்- சுகிர்தவாசதும்பளை,கரவெட்டி, (முறைப் பாட்டுக்காரர்- காண்டீபா). (து)

# மதவழிபாட்டுத் தலங்களை மேம்படுத்த சமூக சேவைகள் அமைச்சர் நடவடிக்கை

யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து மதங்களையும் சார்ந்த வழிபாட்டுத் தலங்களையும் மேம்படுத்தும் நோக்கில் உரிய திட்டங்கள் ஈ.பி.டி.பி.கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இதன் நிமித்தம் யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து மதங்களையும் சார்ந்த வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மதம் சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளை அமைச்சர் நாளையும் நாளை மறுதினமும் தனது யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சராக இருந்த போது யாழ்.குடாநாட்டில் இந்து சமய வழிபாட்டுத் தலங்கள் நிறுவனங்கள் உட்பட, ஏனைய மதங்களினதும் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கலாசார வளர்ச்சிக்காகவும் பாரிய பல உதவிகளை மேற்கொண்டு வந்துள்ளதுடன் பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்தியுள்ளார்.

நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ள மேற்படி சந்திப்புக்களின் பின்னர் குடா நாட்டில் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மத நிறுவனங்கள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிகிறது. (க)

# கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு நடவடிக்கை

மருதங்கேணி பிரதேசத்தில் விசர் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முதல் கட்டமாக 265 நாய்களுக்கான விசர் நோய் தடுப்பு மருந்து அண்மையில் ஏற்றப்பட்டன.

இதேவேளை மக்கள் ஒத்துழைப்பு இன்மையால் தாளையடி பிரதேசத்தில்எந்த நாய்க்கும் தடுப்பு மருந்து ஏற்ற முடியாது போனமை கவலை அளிப்பதாக சம்பந்தப் பட்டோர் தெரிவித்தனர்.

இதன் காரணமாக கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை தாளையடி பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன. இதேசமயம் இன்றும் உடுத் துறை ஆழியவளை, கட்டைக்காடு பிரிவிலும் நாளை செம்பியன்பற்று மாமுனைப் பிரிவிலும் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பதால் வளர்ப்பு நாய்களை கட்டிவைத்து உதவுமாறு கேட்கப் பட்டுள்ளது. (க)

# மகோற்சவம்

நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி புதன் கிழமை வேட்டைத் திருவிழாவும், 6ஆம் திகதி வியாழக்கிழமை மாம்பழத்திரு விழாவும், 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைலாச வாகனமும், 8ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற் சவமும், 10ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும், 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கல்யாணமும் நடைபெற்வுள்ளது. (க-7)

# துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற துப்பாக்கி பிரயோக சம்பவமொன்றில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இரவு 7.05 மணியளவில் இடம்பெற்ற இந்த துப்பாக்கி பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர் எம்.கனகரட்ணம் வயது 70 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னாள் ஈ.பி.டி.பி.உறுப்பினர் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-7)

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று மூன்றாம் திருவிழா

### விழுத் துணையே

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்
திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க் கமலை
துதிக் கின்ற மின்கொடி மென் கடிக்
குங்குமத் தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்தன் விழுத்துணையே!

*அபிராமி அந்தாதி*

### இம்மைப் பேறு ஈயவல்லாள்

நயினைத் தாயே கயிலை நாதர்
குயிலே யென்னக்குறுகா குற்றம்
படமார் நாகம் முடிமேலாக
நடமே செய்வாள் நயினை ராணி
நம்மைக் காக்கும் நாகம்மாளே
இம்மைப் பேறு ஈயவல்லாள்

*சிவ சண்முகவடிவேல்*

### கொடியினை ஏற்று தாயே!

பொன்வண்டு போன்ற உன்றன்
பூவிழி யூஞ்ச லாட
கண்கண்ட தெய்வம் நீயே
காப்பதுன் கடனே யன்றோ
மின்கண்ட கொடியே நாக
பூஷணித் தாயே என்னைத்
தின்கின்ற பாவம் போக்கக்
கொடியினை ஏற்று தாயே!

*கவிமணி கந்த முருகேசதாசனார்.*

### நயினை அம்மனை நாம் பணிவோம்!

மஞ்சள் நீராடி மகிழ்ந்தாடி தமிழ்
மங்கள வாழ்த்து மிகப் பாடி
மிஞ்சும் உவகையில் நெஞ்சம் சிலிர்ந்திட
நயினை அம்மனை நாம் பணிவோம்

பாமாலை சூடியே பாடிப் பணிந்திடும்
நெஞ்சங்கள் திக்கெட்டுமே பெருகிடவே
பூமாலை சூடிப் பொற்பாதம் பணிந்திட
பசும் பெண் கொடியே நீ வருக

*மு.தணிகாசலம் கற்கோவளம்*

### நாகமாயெழுந்து நலம் காக்கும் நாயகி

தீவகத்தை ஆள்பவளும் நீயல்லவா
தீமைகளை கொய்பவளும் நீயல்லவா
பாவங்களை களைபவளும் நீயல்லவா
பக்தர்களை காப்பவளும் நீயல்லவா
நாகமாய் எழுந்தவளும் நீயல்லவா
நலமருளும் நாயகியும் நீயல்லவா
மாதவங்கள் ஏற்பவளும் நீயல்லவா
மக்கள் நலன் காப்பவளும் நீயல்லவா

*மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்*

### வருவாய் வருவாய் அருள்புரிய

சப்த கடல்கள் சங்கமிக்கும்
சமுத்திரக் கரையில் அமர்ந்திருந்து
பக்தர்க் கருளைப் பாலிக்கும்
நயினை அரசி நாகம்மா
கத்திக் கிடக்கும் பக்தர்களின்
கதறல் காதில் விழவில்லையோ
அத் திக் குளது தலை சாய்த்து
அன்னார் துயரம் தீராயோ

*ந.கலைச்செல்வி*

## இன்று ஒரு தகவல்

### புத்தாண்டும் போலித்தனங்களும்

இன்றைய காலத்தில் யாரைப் பார்த்தாலும் மகிழ்ச்சி பொங்கும் புத்தாண்டு வாழ்த்து என்று சொல்லிக்கொள் வது நமது பழக்கம். இதைப்பற்றி ஒரு பெரியவர் என்ன சொல்கிறார் தெரியுமா? இப்படிச் சொல்லிக்கொள்வதில் அர்த்தமே இல்லை என்கிறார். ஒரு நாள் மட்டும் மகிழ்ச்சி தரும் புத்தாண்டு என்று சொல்லிவிட்டால் உடனே இந்த வருடம முழுதும் நமக்கு மகிழ்ச்சியாக இருந்துவிடப் போகி றது என்று அர்த்தமா? மனிதர்கள் வாழ்நாள் முழுவதை யும் இப்படிப்போலித்தனமாகவே கழித்துக் கொண்டிருக் கின்றனர் என்பது அவரது கருத்து.

ஒரு மனிதனுக்குப் போனவருடம் இருந்த ஆயுட்காலத் தைவிட இந்த வருடம் உள்ள ஆயுட்காலம் குறைவு. ஒரு வருடம் குறைந்துவிட்டது அது மட்டுமல்ல ஒவ்வொரு மனி தனின் ஆயுட் காலமும் நொடிக்கு நொடி குறைந்து கொண்டே போகிறது. அப்படி இருக்கும்போது இவன் என்னவோ வருடாவருடம் வளர்ந்து கொண்டிருப்பதாக நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

காலம் என்பது நிரந்தரமானது,எல்லையில்லாதது, அழிவில்லாதது அப்படிப்பட்ட எல்லை இல்லாத காலத் தில் மனிதனின் வாழ்நாள் என்பது ஒரு சிறிய அணுமாதிரி இதை மனிதன் வருடம், மாதம், திகதி என்று பிரித்துக் கொணடு அதை அனுபவிக்க முயற்சிக்கிறான. ஒரு வருடம் போகிறாதாம் அதற்கு விடைகொடுக்கிறானாம் இன்னு மொருவருடம் வருகிறதாம் அதை வரவேற்கிறனாம்.

ஒரே கொண்டாட்டம், கும்மாளம், கலாட்டா காலத்தினு டைய புனிதத்தன்மையையும் எல்லைக்கு உட்படாத அதன் தன்மையை இன்றைய மனிதன் புரிந்கொள்ளவில்லை அதனால் தான் அவனுடைய பேச்சும் செயலும் போலி யாக இருக்கிறது. எல்லையற்ற காலத்தை நிமிடக் கணக் கில் அளக்க முயற்சிக்கிறான் இவன். மனிதன் தனது போலி யான வாழ்க்கையை வாழ்வதற்காகத்தான் வருடம், மாதம், வாரம், நாள் என்று வகைப் படுத்தி வைத்திருக் கிறான்.

காலத்தை எப்படிக் கழிக்கிறோம் என்று நாம் சிந்தித் துப்பார்க்க வேண்டும். ஒரு வருடத்திற்கு 31,53,600 வினாடி கள் இந்த வினாடிகளை நாம் எப்படிச் செலவு செய்கி றோம் எனபதை ஒவ்வொருவரும் சோதனை செய்து பார்க்க வேண் டும்.எத்தனை வினாடிகள் அப்பா அம்மாவுக்கு உதவியாக இருந்திருக்கிறோம் எத்தனை பெரியவர்களை அவமதித் திருக்கிறோம் எத்தனை வினாடிகளை வயிற்றுப்பிழைப்புக் காக செலவிட்டிருக்கிறோம் எத்தனை வினாடிகள் படம் நாட கங்களில் போனது? ஊர்சுற்றியது எத்தனை வினாடிகள் உருப்படாத புத்தகங்களைப் படித்தது எத்தனை வினாடி உருப்படியான காரியம் செய்தது எத்தனை வினாடிகள்? கணக்குப் போட்டுப்பாருங்கள் விடை என்ன வருகிறது அது வெளியே சொல்லிக்கொள்வதுபோலிருக்காது. சரி சார் இந்த உபதேசமெல்லாம் இருக்கட்டும் இந்த புத்தாண்டில் எப் படித தான் வாழவேண்மென்று சொல்கிறீகள்? என்று கேட்கிறீர் கள்? அதையும் அந்தப் பெரியவரே சொல்கிறார்.

காலத்தைக் கழிக்கும் வழி என்ன? என்று கேட்டால் கட மையைக் கருத்துடன் செய்வதுதான் என்கிறார். அவர் துன்ப மின்றி வாழ ஆசைப்படுகிறோம் அதற்கு என்ன வழி? எல் லாத் துன்பங்களுக்கும் அடிப்படையாக இருக்கும் ஆசை களைக் குறைக்கவேண்டும் அதுதான் வழி. ஒரு ரயிலில் பயணிக்கிறோம் நாம் கொண்டு போகும் சுமை குறைவாக இருந்தால் பிரயாணம் சுகமாக இருக்கும். அதுமாதிரி ஆசை கள் என்ற சுமையைக்குறைத்துக்கொண்டால் வாழ்க்கை என்ற பிரயாணம் சுகமாக இருக்கும்.

**Leess Luggage more comfort make travel plesant**

லக்கேஜ் அதிகமாக இருந்தால் அதற்கென்று உபரியான கட்டணமும் செலுத்த வேண்டியிருக்கும். அதுபோல் ஆசை கள் அதிகமானால் அதனால் விளையக்கூடிய அவதிகளை யும அனுபவிக்க வேண்டியிருக்கும். கையில் ஒரு சிறிய பை யுடன புறப்படுங்கள் சார் கவலையில்லாமல் பயணிக்கலாம்.

ஒருவர் என்னைத் தேடிவந்தார். சார் இந்த புது வருடத் தில் எனக்கு ஏதாவது நல்ல கருத்தைச் சொல்லுங்கள் சார் என்றார். நான் உடனே அவரை உட்காரவைத்து உபதேசித தேன். சார் நமது மனம் தான் எல்லாவற்றுக்கும் அடிப்படை இதயம் என்று பூட்டைமனம் என்ற சாவியால திறக்க வேண் டும் எப்படி திறக்கிறோம் என்பதுதான் முக்கியம். ஒரு கதவைத் திறக்க வேண்டுமென்றால் கூட சாவியை வலது புறம் திருப்பினால் பூட்டு திறக்கும் இடதுபுறம் திருப்பினால் பூட்டிக்கொள்ளும். பூட்டும் சாவியும் ஒன்றுதான் சாவியை எந்த திசையில் திருப்புகிறோம் என்பதுதான் இதில் கவ னிக்க வேண்டியது அதைக்கவனித்து நடந்துகொண்டீர்களானால் போதும் என்று அவருக்கு எடுத்துச் சொன்னேன்.

அவரும் அமைதியாகக் கேட்டுக்கொண்டா அதன்பின் நான் அவரைப்பார்ததுக்கேட்டேன் ஏன் சார் நீங்கள் இனிமேல இந்த வருடத்தில் சாவியை எந்தப் பக்கமாகத் திருப்பபோகி றீர்கள? என்று கேட்டேன். அவர் மெதுவாக என்னை நிமிர்ந் துபாாத்து நான் பூட்டைத் திறப்பதற்கு எப்போதும் சாவி யைப பயன் படுத்துவதில்லை சார் ஒரு சிறிய கம்பி இருந் தால போதும் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற பிடிவாதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைவிடவேண்டும்!

### என்கிறார் மன்னார் ஆயர் ராஜப்பு யோசப்

(மன்னார்)



**ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற பிடிவாதத்தை கைவிட்டு சமாதா னத்தை ஏற்படுத்த முறையான அடித்தளத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விட வேண் டும் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் ராஜப்பு யோசப் அடிகளார் தெரிவித் துள்ளார்.**

கொழும்பிலிருந்து வெளியாகும் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள் ளார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு தரப்புப் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் நூறு வீத மான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவேண்டும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக கடைப்பிடித்த பின் னரே அதில் மாற்றம் செய்வதைப் பற்றி யோசிக்க வேண் டும் இப்போது மாற்றம் செய்யவேண்டும் எனக் கூறுவது அர்த்தமற்றது.

கருணா குழு தொடர்பான பிரச்சினையில் அரசாங்கம் ஒரு முடிவை எடுக்கவேண்டும் கருணாவை கொல்ல வேண்டும் என்றோ அழிக்க வேண்டும் என்றோ நாம் கோர வில்லை. மாறாக கருணா குழுவினால் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுவதை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே எமது நிலைப் பாடாகும்.

இரண்டு வாரத்திற்கு கருணா குழுவின் செயற்பாட்டை நிறுத்துவதாக தெரிவித்துள்ள அரசு அக்குழுவின் செயற் பாட்டை முழுமையாக நிரந்தரமாக நிறுத்தவேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ்தான் தீர்வு என்ற நிலைப் பாட்டி லிருந்து விடுபட்டு சமாதானத்தை ஊருவாக்கும் சிறந்த அடித்தளமொன்றை மஹிந்தராஜபக்ஷஏற்படுத்தவேண்டும்.

முன்னைய ஜனாதிபதியின் அதிகாரப் பரவலாக்கல், ரணிலின் சமஷ்டி தீர்வுத் திட்டத்திற்கு சர்வதேச சமூகம் முழு ஆதரவை வழங்கியது. கிணற்றுத் தவளைகள் போல செயற்படும் ஜே.வி.பியினரை மகிழ்ச்சிப்படுத்துவதை கைவிட்டு நாட்டின் எதிர்காலம் குறித்தே மஹிந்த ராஜ பக்ஷ சிந்திக்க வேண்டும்.

சர்வ கட்சி மாநாட்டை கூட்டி பிரச்சினையை ஆராய் வதை நாம் வரவேற்கிறோம். அதேவேளை இம் மாநாட் டில் வெறுமனே கதைத்து காலத்தை தாழ்த்தாமல் சகல கட்சிகளும் இணைந்து பிரச்சினைக்கான தீர்வை முன் வைக்கவேண்டும். நேரடி பேச்சுக்களை விடு த்து நோர்வேயூடாக திறந்த மனதுடன் பேச்சுக்கு வர அரசு முன்வரவேண்டும்.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர் களை அப்புறப்படுத்தக்கூறும்புலிகளின்தீர்மானம்குறித்து அவர்களுடன் நேரடியாக பேசினோம் தனிப்பட்ட ரீதியில் ஐரோப்பிய நாடுகளுடன் தமக்கு எவ்வித முரண்பாடும் கிடையாது அவர்கள் பொதுநல நோக்குடன் திறந்த மன தோடு எமக்கு சேவையாற்றியுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமது அமைப்பை தடை செய்ததன் பின்னர் அவர் கள் நடுநிலையாக செயலாற்ற முடியும் என நாம் கருதவில்லை எனவும் எனவே கொள்கை ரீதியாக இம் முடிவினை மேற் கொள்வதற்கு தாம் தள்ளபட்டதாகவும் விடுதலைப் புலிக ளின் தலைமை தெரிவித்துள்ளது என்றார். (கு)

## இரு இளைஞர்களைக் காணவில்லை!

### உறவினர்கள் ம.உ.ஆ.குழுவில் முறையீடு

நாவற்குழியிலிருந்து சாவகச்சேரி வைத்திய சாலைக்கு சென்ற நபர் ஒருவரையும் புத்தூரில் இருந்து யாழ். நகருக்குச் சென்ற நபர் இருவரையும் காண வில்லை யென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலு வலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் வடக்கைச் சேர்ந்த அபிமன்யு யோகேந்திரன் (வயது–25)என்ற இளைஞன் புத்தூரில் இருந்து யாழ். நகருக்கு கடந்த 23 ஆம் திகதி சென்றதாகவும் இதுவரை அவர் வீடு திரும்பவில்லை எனவும் அவரது மனைவி தெரி வித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாவற்குழியைச் சேர்ந்த ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் (வயது–19) என்பவர் நாவற்குழியிலி ருந்து சாவகச்சேரி வைத்திய சாலைக்கு சென்ற சமயம் காணாமல் போனதாக அவரது உறவினர்களால் முறை யிடப்பட்டுள்ளது. இச்சம்பவமும் கடந்த 23ஆம் திகதி இடம் பெற்றிருக்கின்றது குறித்த நபரை படையினரே கைது செய்ததாக அவர்கள் தெரிவித்த முற்றைப்பாட்டில் குறிப் பிடப்பட்டுள்ளது. (கு–133)

## க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

க.பொ.த.சாதாரணதரம் 2006 ஆம் ஆண்டுக் கான பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜூலை மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பங்களை அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். பாடசாலைகளுக்கு பரீட்சை தொடர்பான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள் ளன. பாடசாலைப் பரீட்சார்த்திகளாக முதலாம் இரண் டாம் தடவைகளில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க ளுக்கு பரீட்சைக்கட்டணம் அறவிடப்படமாட்டது. இரண்டு தடவைகள் மாணவர்கள் பாடசாலை பரீட்சைசார்த்திக ளாக தோற்றமுடியும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சை தொடர்பான விண் ணப்பத்துடன் ஒரு பாடத்திற்கு 25 ரூபா, 2 பாடங்க ளுக்கு 30 ரூபா ,3 பாடங்களுக்கு 35 ரூபா, 4 பாடங்களுக்கு 40 ரூபா, 5 பாடங்களுக்கு 55 ரூபா, 6 தொடக்கம் 10 பாடங்க ளுக்கு 70 ரூபா கட்டணம் செலுத்த வேண்டும் என அறி வுறுத் தப்பட்டுள்ளது. ஒரு மாணவன் ஒரே தடவையில் 10 பாடங்களுக்கும் தோற்ற முடியும். (கு–7)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

கடந்த 22ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மத்திய மாகாண அரச முகாமைத்துவ உத வியாளர் சங்கத்தின் 07 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத் தில் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவு இடம் பெற்றது.

இதன்படி தலைவராக இ.இரத்தினசிங்கமும், உப தலைவராக திருமதி பா. குமாரசாமியும், செயலாளராக த. தனபாலசிங்கமும், உப செயலாளராக லுயிஸ் பத்மி னியும், பொருளாளராக திருமதி கு.சறோஜாவும் தெரிவு செய் யப்பட்டனர்.

*நிர்வாகசபை உறுப்பினர்களாக*

திருமதி கே. தவமலர் ,ரி.கணேசமூர்த்தி, திருமதி கே. தர்சினி, கே. சுதர்சன், திருமதி கே. கணேசலிங்கம், திரு மதி ஐ.எவ்.வின்சன், த. உதயசூரியன், திருமதி ரி. தவீந் திரா, ரி. கமலாசினி, கே. வதனாம்பிகை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (கு)

## தமிழர்கள் போர்க் கலையில் வல்லுநராக உருவாகி போராடும் நிர்ப்பந்தத்தை அரசே உருவாக்கியுள்ளது

### என்கிறார் லெப்.கேணல் லோறன்ஸ்

(கிளிநொச்சி)



தமிழ் மக்கள் யாவரும் போர்க்கலையில் வல்லுந ராக உருவாகிப் போராட வேண்டிய நிர்ப்நத்தினை இலங்கை அரசும் படையினரும் ஏற்படுத்தியுள்ளதாக வடபோர் முனைக் கட்டளைத்தளபதி லெப்.கேணல் லோறன்ஸ் தெரி வித்துள்ளார்.

கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் ஆரம்பமா கிய மாணவர் சேனைக் கட்டுமானப் பயிற்சி நிகழ்வில் கருத் துரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பளை மத்திய கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் நேற்று முன்தினம் காலை 6.30 மணிக்கு இந்நிகழ்வு ஆரம்பமானது.

பொதுச்சுடரினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், பளை பிர தேச அரசியல் துறைப் பொறுப்பாளர் மேனன், பளைப் பிர தேச மகளிர் பொறுப்பாளர் சந்தனா, போராளி விடுதலை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியினை வடபோர் முனைக் கட் டளைத் தளபதி லெப்.கேணல் லோறன்ஸ் ஏற்றி வைத் தார்.

கருத்துரையினை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந் திரன் ,வடபோர் முனைக்கட்டளைத் தளபதி லெப். கேணல் லோறன்ஸ் ஆகியோர் வழங்கினர்.

தளபதி லோறன்ஸ் மேலும் தெரி விக்கையில்,

இன்றைய சூழ்நிலை என்பது மிகவும் ஆபத்தான சூழ்நிலை ஆகும். படையினர் எந்த வேளை யிலும் பாரியளவில் போரைத் தொடங்கி நில ஆக்கிரமிப்பு நடவடிக்கை யில் ஈடுபட ஆயத்தமாகின்றனர்.

தமிழ் மக்கள் யாராக இருந்தாலும் வயது வேறுபாடு இன்றி மிகக் கோரமாக படுகொலை செய்யப்படுகின் றனர். இந்த நேரத்தில் எமது மக்கள் அனைவரும் போர்க் கலை யில் வல்லுநர்களாக உருவாக்கம் பெற்று படையி னருக்கு எதிராக போராட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாக்கப் பட்டிருக்கின்றது.

கடந்த காலத்தில் ஓயாத அலைகள் –03 நடவடிக்கை யின் போது எவ்வாறு மக்கள் படை, மாணவர் சேனை, எல்லைப்படை என எமது மக்கள் போர்க்கலை பெற்று எதி ரியை விரட்டி அடித்தார்களோ அதே போன்ற ஒரு சூழலே இன் றும் உருவாகி உள்ளது என்றார்.

இக்கருத்துரையின்பின்னர்பயிற்சிஆசிரியர்நா. இசைப் பிரியன் தலைமையில் லெப்.கேணல் லோறன்ஸ் பயிற் சியினை ஆரம்பித்து வைத்தார். (கு)


# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 22 ஆக்கம்: மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள்– நேரம்: 1மணி 15 நிமிடம்

**ஆர்த்தி என்ற மாணவியினால் கணனியில் வடிவமைக்கப் பட்ட யானையின் படம் கீழே தரப்பட்டுள்ளது.**



1.இந்த யானைக்கு எத்தனை கால்கள் உண்டு?

2.யானையின் கொம்புகள் எங்கே யுள்ளன?

3.யானையின் கொம்புகளை எப்படி அழைப்பர்?

## கீறிட்ட இடங்களை நிரப்புக.

4.யானையின் மலம் ........................................
5.யானையை செலுத்துபவன் ........................................
6.யானை கட்டுமிடம் ........................................
7.ஆண் யானை ........................................
8.பெண் யானை ........................................

## கீழேயுள்ள பழமொழிகளை முடிக்குக

9.யானை வரும் பின்னே ....................
10.ஆனைக்கும் ....................
11.ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன் ....................
12.யானை உண்ட விளாம்பழம் எப்படியிருக்கும் ....................
13.யானையைக் கட்டுப்படுத்தப்பயன் படும் கருவி ....................

கீழே தரப்பட்டுள்ள சொற்களை வைத்து வசனம் அமைக்குக.

14.ஆனை ..................................................
15.பலம் ..................................................

இவ்விவரணத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.
நாங்கள் கடைக்கு செல்கிறோம் நீங்கள் மைதானத்திற்கு செல்லுங்கள் அவர்கள் சிரமதானம் செய்வதற்காக அங்கே வருவார்கள். நான் தேநீருடன் அங்கே வருவேன் அவள் பிஸ்கட்டையும் வாழைப்பழத்தையும் கொண்டு வருவாள். நீ வடையையும் முறுக்கையும் எடுத்துவா

## பந்தியிலுள்ள சொற்களை அட்டவணைப் படுத்துக.

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| 16. .................... | 18. .................... | 20. .................... |
| 17. .................... | 19. .................... | 21. .................... |
| 12 | 12 | 12 |

22.பிரித்தெழுதுக: தேநீர் ........................................
23.சிரமதானம் என்றால் என்ன ? ........................................

## கீழே தரப்பட்டுள்ள பழ வகைகளுக்கு உதாரணம் தருக

24.தனிப்பழம் 25.திரள்பழம் 26.கூட்டுப்பழம்

.............. .................. ....................

சரியான விடையின் இலக்கத்தில் அடையாளம் இடுக.
27.எமது அணியிலுள்ள அனைவரும் வீரர்கள். பகீர் நன்றாகப் பாய்வான். ஆனால் நக்கீரனோடுதான் போட்டியிட வேண்டுமெனின்.
நக்கீரன்
1.எமது அணியைச் சேர்ந்தவன்
2.எதிரணியைச் சேர்ந்தவன்
3.பாய்ச்சலில் வீரன்

## பொருத்தமான விடை தருக


28.கபில், மேனகா, சேரன், ரூபன் ஆகியோர் வரிசையாக நின்றனர். அவர்கட்கு பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சல், வெள்ளை நிற பலூன்கள் வழங்கப்பட்டன ரூபன் கீதாவிடம் பலூனை மாற்றுகிறான் பின் கீதா சேரனிடம் பலூனை மாற்றுகிறாள் இப்போது கீதாவின் பலூனின் நிறம் என்ன ?

**நாம் தகவல் பெறும் பல்வேறு நிறுவனங்களுடைய சின்னங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து அட்டவணைகளை நிரப்புக.**

| சின்னம் | நிறுவனத்தின் பெயர் | தகவல் பெறப்படும் முறை |
|---|---|---|
| 29. | | |
| 30. | | |
| 31. | | |
| 32. FM 101 . 5 | | |
| 33. www.dailynews.com | | |

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.
34.ஊடகங்களுள் காலத்தால் முந்தியது.
(தொலை பேசி, வானொலி, பத்திரிகை)
35.எல்லே விளையாட்டில் ஒரு குழுவிலுள்ள ஆகக்கூடிய வீரர்களின் எண்ணிக்கை.
(பதினாறு, பன்னிரெண்டு, பதினொன்று)
36.நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில் அந்நாட்டு அரசினால் வழங்கப்படுவது.
(பொதுச்சொத்து,அரசாங்கசொத்து,தனியார்சொத்து)

## கீழே காட்டப்பட்டுள்ளது காந்தத்தினால் செய்யப்பட்ட விளையாட்டு பாரம் தூக்கியாகும்.




ஒருபெட்டியில் பொத்தான்கள், ஆணி கள், பிளாஸ்ரிக்மூடிகள், தகரத்துண்டு கள், குண்டூசிகள், கல், சிரட்டைத் துண்டுகள் என்பன வைக்கப்பட்டு ள்ளன.

பாரம் தூக்கியால் தூக்கப்படும் பொருட்கள் (37) ...............(38)............

பாரம் தூக்கியால் தூக்க முடியாத பொருட்கள்(39).............(40).............

## கீழே தொங்கிக் கொண்டிருக்கும் இரண்டு சட்டங்களில் ஒன்று காந்தம் ஆகும் எனக் சுதர்சன் கூறினான்.



(41)காந்தத்தைக் கண்டு பிடிக்க நீர் மேற் கொள் ளும் எளிய பரிசோதனை ஒன்று தருக?
..................................................

## சுருக்கமான விடை தருக.

42.பத்தினிடத்திலும், நூறினிடத்திலும் மட்டும் பூச்சியம் வருகின்ற நான்கு இலக்க எண் ஒன்று எழுதுக ..................................

43.4251என்ற எண்ணில் இரண்டின் பெறுமானம் என்ன?
..................................

44.53287 என்ற எண்ணில் மூன்றின் இடப் பெறுமானம் என்ன?
..................................

45.கணேசா வித்தியாலத்திலிருந்து 310 மாணவர்கள் சுற்றுலாவுக்குச் சென்றனர். ஒரு பஸ் வண்டியில் 50 மாணவர்கள் மட்டும் பயணம் செய்யலாம் எனின் எத்தனை பஸ் வண்டிகள் தேவை.


46.கௌரியின் தாத்தா 1939 ஆம் ஆண்டு பிறந்தார். 1999 இல் தாத்தாவின் வயது கௌரியின் வயதின் 5மடங்கிலும் 5வயது அதிகமாகும் எனின் கௌரியின் வயது என்ன?

## கீழேயுள்ள படங்களைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களை எழுதுக.

(47)



(48)



(49)



(06ஆம் பக்கம் பார்க்க)

தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களைத் தமிழில் எழுதுக.

(50)கார்யாவய ..................  (51)வசிகிலிய ................  (52)பிந்தூர ..............

(53)24+1053+140 =..............  (54)197+2129+99 =..............

55-60 வரையான விளாக்களுக்கு
தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து பொருத்தமான வகையில் கதையை எழுதுக.



## வினாத்தாள் – 20 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. 2 | 02. 3 | 03. பல்துலக்குதல் |
| 04. முகம் கழுவுதல் | 05. மலசலம் கழித்தல் | 06. கடவுளை வணங்குதல் |
| 07.உணவு உண்ணுதல் | 08. பாடசாலை தயாராத | 09. மனிதர் |
| 10. வீட்டையும் நாட்டையும் | 11. நாம் | 12. மானிடத்தை மதிக்க வேண்டும் |
| 13. வீழ்ந்திடுவோம் | 14. பொருத்தமானது | 15. பூக்கள் மலரும் |
| 16. ஆவரசு | 17. லில்லி | 18. வற்றாளை |
| 19. இலுக்புல் | 20. மூங்கில் | 21. 582 |
| 22. புடோலங்காய் | 23. 250 | 24. 336 |
| 25. 19.50 | 26. 568Kg | 27. 550 |
| 28-32.பொருத்தமானது | 33. துருப்பிடிக்காமலிருக்க | 34.வியர்வை கூட |
| 35.எல்லா வேர்களும் நீரை உறிஞ்சும் | | 36-37.பொருத்தமானது |
| 38.Wednesday | 39.Sataur day | 40.Thurs day |
| 41. காற்று மழை | 42. குடை மரம் மழை பெய்தல் | 43.ஐப்பசி- மார்கழி |
| 44. ஒட்டுச்சித்திரம் | 45. சுனாமி | 46. மல்லிகைப்பூ |
| 47. எழுதுங்கள் | 48. பால் | 49. வெள்ளை |
| 50.விரும்பி | 51. றெஜிபோமை துளைக்கும் | 52. வெப்பத்தினால் கம்பி நீளும் |
| 53. மெழுகுதிரியிலிருந்து | 54. திண்மம் திரவம் வாயு | |
| 55. வெப்பம் வெளிச்சம் | 56-60.பொருத்தமானது | |

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் -22

மாணவர் முழுப்பெயர் : ..................................

பாடசாலையின் பெயர் : ..................................

வீட்டின் முகவரி : ..................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 05.07.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும. உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 22
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன் கருதி இவ வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக குறபபடவும. பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

அன்பான மாணவர்களே!
புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற வேண்டுமா?
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வலம்புரியில் வெளிவரும் புலமைப் பரிசில் பரீட்சை வினாப்பத்திரத்தை தவற விடாதீர்கள்!

# பணம் பறிப்பு ஆட்கடத்தல்களை மாவோயிட்டுகள் நிறுத்த வேண்டும்

## நேபாள கட்சிகள் வலியுறுத்தல்

(காத்மண்டு)

ஆள் கடத்தல், பணம் பறித்தல், கட்டாய கருத்துத் திணிப்பு போன்ற செயல்களை மாவோயிஸ்டுகள் உடனடியாக நிறுத்த வேண்டும். அரசுடன் அவர்கள் செய்து கொண்டிருக்கும் உடன்பாட்டின்படி 25-அம்ச நடத்தை நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நேபாளத்தில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏழு பிரதான அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யுஎம்எல் பிரிவு) பொதுச் செயலரும் ஆளும் கூட்டணியின் தலைவருமான மாதவ் குமார் நேபாள் மத்தி நேபாளத்தில் உள்ள சிதாவன் நகரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரைநிகழ்த்தும் போது இதை வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில், ஏழு கட்சிக்கூட்டணி மீது மாவோயிஸ்ட்டுகளுக்கு இன்னும் முழு நம்பிக்கை வரவில்லை. எனவே அவர்களது அவநம்பிக்கையைப் போக்க அவர்களுடன் விரிவாக விவாதிக்க வேண்டியது அவசியம். ஏழு கட்சிக் கூட்டணிக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் இடையே 8 அம்ச உடன்பாடு ஏற்பட்டது. நாடு எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க அந்த உடன்பாட்டை நேர்மையாக செயல்படுத்த வேண்டும்.

அதன்படி, அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மாவேயிஸ்டுகளின் வசம் உள்ள ஆயுதங்களையும் தளபாடங்களையும் அவர்களிடம் இருந்து எவ்வாறு வாங்குவது அவற்றை என்ன செய்வது என்பது பற்றியெல்லாம் பேச்சுவார்த்தை நடத்தி முடிவு செய்ய வேண்டும் என்றார்.

மக்களை மிரட்டி கட்டாய நன்கொடை வசூலிக்கும் செயலை மாவோயிஸ்டுகள் உடனே நிறுத்த வேண்டும். சாமானியர்களிடமிருந்து பறிமுதல் செய்த பொருள்களை அவர்களிடம் திருப்பி ஒப்படைத்து விட வேண்டும் என்று கூட்டணியின் மற்றொரு கட்சியான நேபாள காங்கிரஸ் தலைவர் பதம் நாராயண் சௌத்ரி வலியுறுத்தியுள்ளார். (து)

# பல்லி விழுந்த சத்துணவை உண்ட 200 மாணவர்கள் மயக்கம்

(உடுமலை)

உடுமலை சிவசக்தி காலனி பகுதியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியுள்ளது. தொடக்கப் பள்ளியில் 311 மாணவர்களும், உயர் நிலைப்பள்ளியில் 311 மாணவர்களும் படித்து வருகின்றனர். தொடக்கப் பள்ளியில் 200 பேரும், உயர் நிலைப்பள்ளியில் 197 பேரும் சத்துணவு சாப்பிட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் மதியம் சத்துணவு மையத்தில் மாணவர்கள் வழக்கம்போல் சத்துணவு வாங்கி சாப்பிட்டனர். அப்போது 5ஆம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவருக்கு பரிமாற்றப்பட்ட உணவில் பல்லி ஒன்று கிடந்துள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த அம்மாணவி சத்துணவு அமைப்பாளர் கூறியுள்ளார்.

சத்துணவு அமைப்பாளர் பல்லியை தட்டில் இருந்து எடுத்து வெளியில் எறிந்தார். மேலும் ஒழுங்காக சாப்பிட்டுவிட்டு செல். இதை வெளியில் யாரிடமும் சொல்லக் கூடாது என மிரட்டி அடித்துள்ளார். பல்லி விழுந்த உணவை சாப்பிட்ட அச்சிறுமி வீட்டுக்கு வந்ததும் நடந்ததை கூறினாள். சிறிது நேரத்தில் மயக்கமாகி சரிந்தாள். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த பெற்றோர் உடனடியாக அரசு ஆஸ்பத்திரியில் அவரைச் சேர்த்தனர்.

இதேபோல் சத்துணவு சாப்பிட்ட ஏனைய 200 மாணவர்களுக்கும் மயக்கம், வாந்தி, தலைசுற்றல் ஏற்பட்டுள்ளது. உடனடியாக அருகில் இருந்தவர்கள் குழந்தைகளை உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர்.

சத்துணவு சாப்பிட்ட மற்ற குழந்தைகள் 124 பேருக்கு வாள வாடி அரசு ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் தலைமையில் மருத்துவ குழுவினர் பள்ளியிலேயே சிகிச்சை அளித்தனர். சத்துணவு சாப்பிட்டவர்களில் 200க்கும் அதிகமான மாணவர்களுக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டதையடுத்து பெற்றோர் பள்ளியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (து)


WORLD NEWS
உலக தரிசனம்

# சமாதானத்தை ஏற்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுமாம்

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க

(கொழும்பு)

அரசாங்கம் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு கொண்டிருக்கையில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கொலைகளை



மேற்கொள்வதன் மூலம் பயங்கரவாதப்பாதையில் தொடர்ந்துசென்று கொண்டிருக்கின்றனர் என்பதை உணர முடிகிறது என பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பன்னிப்பிடியாவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை யடுத்து பிரதமர் விடுத்துள்ள விசேட செய்தியிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும், மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவின் கொலை நாடு முழுவதற்குமான பாரிய இழப்பாகும்.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் கௌரவமான சமாதானத்தை கொண்டு வர அரசாங்கம் துணிகரமான முயற்சிகளை மேற்கொள்கிறது. இதே வேளையில் விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளை புறக்கணித்து பயங்கரவாத நடவடிக்கைகளைதொடர்ந்தும்மேற்கொண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி வருகின்றனர்.

அத்துடன் அரசாங்கத்தின் பொறுமையை விடுதலைப்புலிகள் அதிகளவில் சோதிக்கின்றனர். இதேவேளை மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்கியது யுத்த மொன்றை எதிர் கொள்வதற்கு அல்ல.நாட்டை பிரிக்காத ஒரு சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதுஎன்று தெரிவித்தார்.(க-7)

# கிழக்குத் தீமோர் பிரதமர் இராஜினாமா மக்கள் கிளர்ச்சி வெற்றியடைந்தது!

கிழக்கு தீமோர் பிரதமர் பதவியிலிருந்து மாரி அல்காதிரி இராஜினாமா செய்துவிட்டார். கடந்த திங்கட்கிழமை காலை இதை அவர் அறிவித்தார். இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக அதிபர் கோரினால் உதவிகள் செய்யத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார். இதையடுத்து அங்கு ஏற் பட்டிருந்த அரசியல் பதற்ற நிலை தணிந்து சுமுக நிலை ஏற்படுவதற்கு வழி பிறந்துள்ளது.

பசுபிக் சமுத்திரத்தில் இந்தோனேசியத் தீவுக்கு அருகில் உள்ள நாடு கிழக்குத்தீமோர் குடியரசு. இதன் அதிபராக சனானா குஸ்மாவ் பதவி வகிக்கிறார். பிரதமராக மாரி அல்காதிரி பதவி வகித்தார். வறுமையின் பிடியில் சிக்கித்தவிக்கும் இந்நாட்டில் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வழிகாண முடியாமல் இருக்கிறது. இந்நிலையில் மக்களிடையே பிளவை ஏற்படுத்தும் வகையிலும் இராணுவத்தின் ஒரு பிரிவினருக்கும் பொலிஸ் துறைக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தும் நடவடிக்கையிலும் பிரதமர் மாரி ஈடுபட்டார். மக்களிடையே ஏற்பட்ட மோதலில் 20க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். 1.5 லட்சம் மக்கள் உயிருக்குப் பாதுகாப்பு தேடி வசித்த வீடுகளை விட்டு வெளியேறினர்.

அங்கு மோதல் வெடிக்காமல் இருக்க ஏற்கனவே 2200 அமைதிகாப்புப்படை வீரர்கள் ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்டு பணியில் ஈடுபட்டுள்ளனர்.


இந்நாடு இந்தோனேசியாவிட மிருந்து விடுதலை பெற்று குடியரசாவதற்கு முன்னால் நடந்த கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர்தான் இப்போதைய அதிபர் குஸ்மாவ். அவருக்குப் பிரதமரின் போக்கு பிடிக்க வில்லை. நீங்கள் இராஜினாமா செய் கிறீர்களா நான் செய்யட்டுமா என்று பிரதமரிடம் கேட்டார்.

அவர் அதிபர் இராஜினாமா செய்தால் மக்களின் கோபம் நமக்கு எதிராகத்திரும்பும் என்று உணர்ந்து கொண்ட பிரதமர் இராஜினாமா செய்துவிட்டார். அதே சமயம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் தொடர்ந்து நீடிப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறார். (45து)

# கர்ம்வீரர் காமராஜர்

## மீள்பார்வை 11

முருக-தனுஷ்கோடி



### வழக்குகள் தொடர்ந்தனர்!

காந்திஜியின் அகிம்சைக் கொள்கையில் பற்றுக்கொண்ட காமராஜ் வெடிகுண்டுச் சதி போன்ற பலாத்கார வழிகளில் இறங்கவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும் பொலிஸாருக்குச் சிம்ம சொப்பனமாகவே அவர் இருந்தார். வழக்கு முடிந்த சில மாதங்களில் வைஸ்ராய் வெலிங்டன் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்தார். தமிழ் நாட்டில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்த இரண்டு வாரமும் தலைவரை பொலிஸார் கைது செய்து சிறைக்காவலில் வைத்திருந்தனர்

### காமராஜிடம் நான் கற்ற பாடம்

1934 ஜனவரி 15ஆம் திகதி வட பீகாரில் பூகம்பம் ஏற்பட்டது. கணக்கற்ற சேதங்கள் பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். பூகம்பத்தினால் 15 ஆயிரம் சதுர மைல் பரப்பளவு நிலம் பாதிப்புக்கு உள்ளானது.

பாபு ராஜேந்திர பிரசாத் அப்போது ஒரு வேண்டுகோள் விடுத்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வருமாறு வேண்டினார். அந்த வேண்டுகோளுக்கு இணங்கித் தலைவர் காமராஜ் தமிழ்நாட்டிலிருந்து முடிந்த உதவிகளைச் செய்தார்.

மே.18,19 திகதிகளில் பாட்னாவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது சட்ட சபைக்குள் இருந்து பிரிட்டிஷ் ஆட்சியோடு போராடுவதாக இருந்த சுயராஜ்யா கட்சி காங்கிரஸின் உறுப்பாக ஆயிற்று.

1935 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி காங்கிரசின் பொன்விழா நாடெங்கும் கொண்டாடப் பட்டது. பட்டாபி சீதாராமையா எழுதிய இந்திய தேசிய காங்கிரஸ் வரலாறு என்ற புத்தகம் பொன் விழா நினைவாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சார்பாக வெளியிடப்பட்டது. விருதுநகரிலும் தலைவர் காமராஜ் நேர் பார்வையில் பொன்விழாக் கொண்டாட்டம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தலைவரின் விருப்பப்படி விழாக் குழுவிற்கு நானே அமைப்பாளராக நியமிக்கப்பட்டேன் ஆயிரக் கணக்கில் பண வசூலுக்கு அவர் உதவி செய்தார். பணப் பொறுப்பு என்னிடமே இருந்தது.

பொன்விழாவன்று விருதுநகர்க் கடைவீதி முழுவதும் வாழைமரங்கள் , தோரணங்கள் வீடுகள் தோறும் மாக்கோலம் , மாவிலைகள் குருநதான் கோவில் தோட்டத்தில் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை எல்லோருக்கும் பலவகைக் கறிகளுடன் சமபந்திச் சாப்பாடு மாலையில் பல வித வாத்தியங்கள் முழங்க எல்லாவித ஆட்டங்களோடும் ஊர்வலம் இரவில் சர்க்கஸ் வேலை உட்படப் பலவிதக் காட்சிகள் கச்சேரிகள் இவ்வளவையும் சிறப்பாக நடத்திய ஒரு கமிட்டிக்கு என்னை அமைப்பாளராகப் போட்ட காமராஜை நான் மறக்க முடியுமா?

அடுத்த வாரம் பொன்விழா வரவு செலவுகளைச் சரிபார்க்க கமிட்டிக் கூட்டம் கூட்டப்பட்டது. வரவுக் கும் செலவுக்கும் 67 ரூபாய் 3 அணா வித்தியாசம் ! ஏதோ செலவு செய்ததில் எழுத மறந்து விட்டேன். 67 ரூபாய் 3 அணா வித்தியாசத்திற்கு விவரம் கேட்டார். காமராஜ் எப்படியோ செலவு எழுத மறந்து விட்டது. என்மேல் நம்பிக்கை வைத்து வித்தியாசத் தொகையைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று வேண்டிக்கொண்டேன்.

தள்ளுபடி செய்யக் காமராஜ் ஒப்புக்கொள்ள வில்லை அரை மணி நேரம் அவகாசம் கொடுக்கிறேன். கணக்கைச் சரியாக எழுதிக் கொடு இல்லையானால் 67 ரூபாய் 3 அணாவைக் கட்டிவிட வேண்டும் என்றார்.

நான் பணத்தைக் கட்டிவிட்டேன் என் மீது தலைவருக்கு நம்பிக்கை உண்டு ஆனால் இந்த இடத்தில் நம்பிக்கை முக்கியமல்ல பொதுப் பணத்தைக் கையாளுபவர்கள் கணக்கைச் சரியாக வைத்துக்கொள்ளவேண்டும். இந்தப் படிப்பினையை நான் தலைவர் காமராஜிடமிருந்து கற்றுக் கொண்டேன் அன்று முதல் நான் எந்தப் பொது விஷயத்திலும் பணப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதே இல்லை.

## 04. அக்கினித் திராவகம்

### சத்தியமூர்த்தியின் சீடரானார்

1936 ல் காமராஜுடைய வாழ்க்கயே தமிழ் நாட்டுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தமிழ் நாடு காங்கிரசின் எந்த நடவடிக்கையும் காமராஜுடைய உதவி ஆலோசனையுடன் தான் நடை பெறும் என்ற நிலை ஏற்பட்டது. காரைக்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில் சத்தியமூர்த்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் காமராஜ் செயலாளராகப் பதவி ஏற்றார். 1936 ல் பண்டித நேரு தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்த போது சத்திய மூர்த்தியும் காமராஜும் அவருடன் சுற்றுப்பயணம் செய்தனர்.

ஜஸ்டிஸ்கட்சி காங்கிரசைத் தோற்கடித்துவிடும் என்ற நப்பாசையில் பிரிட்டிஷ் அரசு தமிழ் நாட்டில் முதலில் தேர்தல் நடத்தத்திட்டமிட்டது. இங்கு காங்கிரஸ் தோற்கடிக்கப் பட்டு விட்டால் இந்தியா முழுவதும் அந்த எதிரொலி கிளம்பிக் காங்கிரஸ் வெற்றி வாய்ப்புக்களை இழந்துவிடும் என்பது பிரிட்டிஷாரின் கணிப்பு. இளைஞர்களின் நெஞ்சில் கொழுந்துவிட்டடு எரியத் தொடங்கிய விடுதலை வேட்கைத் தீயைப் பற்றியும் ஸ்தாபனத்தைக் கட்டிக்காக்கும் சாமர்த்தியம் படைத்த சத்திய மூர்த்தியைப் பற்றியும் இந்தத் தேர்தல்தான் பல தகவல்களைக் கொடுக்கப் போகிறது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. காமராஜ் என்ற இளைஞன் கட்சி வெறியுடன் கூர்வாள் எடுத்து அன்னிய ஏகாதிபத்தியத்தைச் சாட இந்தத் தேர்தலே வித்திடப்போகிறது என்பது அப்போது பிரிட்டிஷாருக்குத் தெரியவில்லை.

### காமராஜை நோக்கி அக்கினித் திராவகம்

1937 சட்ட சபைக்குப் பொது தேர்தல் நடைபெற்றது. சாத்தூர் தொகுதியில் அவர் போட்டியிட்டார். சொந்த ஊரான விருதுநகர் சாத்தூர் தொகுதியில் அடங்கியிருந்தது. சாத்தூர் தொகுதியில் இரண்டு தொகுதிகள் இருந்தன பொதுத்தொகுதி ஒன்று ரிசர்வ் தொகுதி இன்னொன்று பொதுத்தொகுதிக்குக் காங்கிரஸ் சார்பாகத் தலைவர் காமராஜும் ஜஸ்டிஸ் கட்சி சார்பாக ராமசாமியும் போட்டியிட்டனர். ரிசர்வ் தொகுதிக்குக் காங்கிரஸ் சார்பாக மாணிக்கமும் அவரை எதிர்த்து மீனாம்பாள் சிவராஜும் போட்டியிட்டனர். தேர்தலுக்கு முன்னரே காமராஜை எதிர்த்துப் போட்டியிட்ட ராமசாமி விலகிக் கொண்டார் .பொதுத் தொகுதியில் காமராஜ் மட்டும்தான் வேட்பாளர் ஆயினும் தேர்தல் நடைபெற்றது.

அப்போதெல்லாம் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு நிறம் கொடுக்கப்பட்டிருக்கும் காங்கிரஸ் ஓட்டுப்பெட்டிக்கு மஞ்சள் நிறம் ஒதுக்கப்பட்டிருந்தது. தேர்தல் நேரத்தில் எங்கு பார்த்தாலும் பொதுக் கூட்டமும் ஊர்வலமும் நடந்துகொண்டேயிருந்தது. அப்போது காந்திஜுக்கு ஜே! மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுப்போடுங்கள்...! என்ற கோஷம் தான் கேட்டுக்கொண்டேயிருக்கும். (தொடரும்)

## வலி. மேற்கில் 306 குடும்பங்களுக்கு முதலாம் கட்டக்கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 306 குடும்பங்களுக்கு உலக வங்கி வீடமைப்பு திட்டமுதலாம் கட்ட கொடுப்பனவுக்கான 50 ஆயிரம் ரூபா வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச்செயலர் பிரிவில் உலக வங்கியின் இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டத்தில் 400 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

சுளிபுரம் மத்தி , பண்ணாகம், காளையடி, பனிப்புலம் குஞ்சன் கலட்டி, வட்டு தெற்கு முதலிகோவிலடி, வட்டு தெற்கு, செம்பாட்ட தோட்டம், மூளாய் பிள்ளையார் கோவிலடி, மூளாய் வேரம் , சுழிபுரம் மேற்கு பெரிய புலோ ஆகிய பின்தங்கிய கிராமங்க்ள் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த 306 குடும்பங்களுக்கு மக்கள் வங்கியில் அவர்களின் சேமிப்புக் கணக்குகளுக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா அண்மையில் பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினரால் வைப்புச் செய்யப் பட்டுள்ளது. (க-7)

## அதிகாரிகளின் அசிரத்தையால் அநியாயமாகப் போன உயிர்

(யாழ்ப்பாணம்)

மின்சார திணைக்களத்தின் பொறுப்பற்ற நடவடிக்கை காரணமாக அநேகர் தமது உயிர்களை இழந்து வருவது யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணமாக நடந்து வரும் ஒரு நிகழ்வாகியுள்ளது.

மின்சார திணைக்களத்தின் தவறு காரணமாக ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வட்டுக்கோட்டையில் தரணிதரன் என்ற மாணவனும் உயிரிழக்க நேரிட்டுள்ளது.

தொழில் ஆணையாளரின் (கைத்தொழில் பாதுகாப்பு) உத்தரவின் பேரில் இச்சம்பவத்தை மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் வடபிராந்தியம் சி.மகேந்திரராஜான் (மின் பட்டையப் பொறியியலாளர்) நேரில் சென்று விசாரணை செய்தார் அவர் பின் வருமாறு தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் மரணமடைந்த தரணிதரன் சம்பவதினத்தன்று உறவினருக்கு உதவி செய்யும் நோக்கில் அவர்களின் கிணற்றில் இருந்து மண்ணெண்ணையால் இயங்கு நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீர் பாய்ச்சிக்கொண்டிருந்த போது பக்கத்தில் உள்ள புளியம் மரம் ஒன்றைக் தற்செயலாக தொட்டிருக்கிறார்.

**Overhead line** இன் செப்புப் புவிக்கடத்தி **(Earlh conduclor)** இந்த புளியமரத்தில் கட்டப்பட்டிருந்ததால் உண்டான கசிவு மின்சாரத்தின் மூலம் ஏற்பட்ட மின் ஊட்டலினால் அவர் பரிதாபமரணத்தை தழுவ நேர்ந்தது. இச்சம்பவத்திற்கு அதிகாரிகள் விட்ட தவறே காரணமாகும். இச்சம்பவத்தை அறிந்ததும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே வந்து தவறை திருத்திச்சென்றுள்ளனர். அவர்களால் விட்ட தவறை திருத்த முடிந்ததே அன்றி போன உயிரை மீட்டுக்கொடுக்க முடியவில்லை. இதுபோன்ற சம்பவங்கள் கடந்த காலங்களிலும் நடந்துள்ளது.

மின் இணைப்புக்களை கொடுக்கும் நேரத்தில் செய்யவேண்டிய தாக்கத்தை சரிவரச்செய்திருந்தால் இத்தகைய உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்க முடியாது. (து)

## கல்லூரி தின நிகழ்வு

(துன்னாலை)

கரவெட்டி திரு இருதயக்கல்லூரியின் கல்லூரி தின நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்வில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு பி.ஆனந்த குமார் முதன்மைவிருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் கல்லூரியின் அதிபராக 15 வருடங்கள் சேவையாற்றிய ரி.எவ்.மனோகரன் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

அதனையொட்டி அவருக்கான பிரிவு உபசார விழாவும் கல்லூரி சமூகத்தினரால் நாடத்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் அதிபரின் பாரியாரும் கலந்துகொள்ளவுள்ளார். (க-101)

## தமிழ் மொழி தினப் போட்டி ஜூலை-19இல் நடைபெறும்?

(யாழ்ப்பாணம்)

விபுலானந்த அடிகளாரின் நினைவு தினமான ஜூலை 19ஆம் திகதி வலய மட்டத்திலான தமிழ் மொழித்தினப் போட்டிகளையும் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தினையும் நடத்த ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கல்வியமைச்சு வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டி சம்பந்தமான சுற்று நிருபம் வலயக் கல்விப் பணிப்பாள்ர்களுக்கும் பாடசாலை அதிபர்களுக் கும் கல்வியமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தினப் போட்டிகள் பாடசாலை மட்டம், வலயமட்டம், மாகாண மட்டம் , தேசிய மட்டம் ஆகிய நிலைகளிலேயே நடத்தப்படும்.

பாடசாலைகளின் தொகை அதிகமாக காணப்படுமிடத்தில் வல யத்திற்குள் கோட்ட ரீதியாகவும், மாகாணத்திற்குள் மாவட்ட ரீதியாகவும் போட்டிகளை சம்பந்தப்பட்டவர்கள் அனுமதி பெற்று நடத்தப்படல்வேண்டும்.

போட்டிகள் யாவும் பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பும், வலய மட்டத்தில் ஜூலை 19 ஆம் திகதிக்கு முன்பும், மாகாண மட்டத்தில் 12.09.2006ஆம் திகதிக்கு முன்பும் நடத்தப்பட வேண்டு மெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தேசிய நிலை போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினால் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மாகாண மட்ட, தேசிய மட்ட போ[illegible] முதலாம், இரண்டாம் , மூன்றாம் இடங்க[illegible] (க-7)

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் ஜேர்மனி 2006

## சுவிட்சர்லாந்துடன் பெனால்டி ஷீட் அவுட் மூலம் வென்ற உக்ரைன் முதன்முறையாக காலிறுதிக்கு

உலககோப்பைவரலாற்றில் முதன் முறையாக காலடி எடுத்து வைத்த உக்ரைன் கலக்கலாக காலிறுதிக்கு முன்னேறியது. பெனா



ல்டி ஷீட் அவுட் மூலம் உக்ரைன் அணி சுவிட்சர்லாந்தை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது .தொடர்ந்து மூன்று வாய்ப்புக்களை தவறவிட்டனர். சுவிட்சர் லாந்து தொடரில் இருந்து பரிதாபமாக வெளி யேறியது.

நேற்று முன்தினம் கலோனில் நடந்த இரண்டாம் சுற்று போட்டியில் சுவிட்சர் லாந்து அறிமுக உக்ரைன் அணிகள் மோதின. ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் உக்ரை னுக்கு அருமையான வாய்ப்பு அணியின் தலைவர் ஆன்டிரி ஷெவ்சென்கோ அப்படி யே பறந்து பந்தை தலையால் முட்டி வலைக் குள் தள்ள பார்த்தார்.

ஆனால் பந்து தரையில்தட்டி கோல்போஸ்டில் பட்டுவெளியேற அரிய வாய்ப்பு நழுவியது. அடுத்து 23 வது நிமிடத்தில் சுவிட்சர்லாந்துக்கு பிறி-கிக் வாய்ப்பு இப் போது 20 மீட்டர் தூரத்தில்இருந்துஅலெக்சாண்டர்பிரெய்அடித்த பந்து கோல் போஸ்டில் பட்டு திரும்பி யது.

அதை டிரன்கிளா பர்னட்டா மீண்டும் அடிக்க பந்து கோல் போஸ்டில் இருந்து விலகிச் செல்ல வாய்ப்பு வீணானது. இப்படி இரு அணிகளும் கோல்போஸ்டில் அடித்து வாய்ப்புகளை கோட்டை விட முதல் பாதி முடிவில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

இரண்டாவது பாதியில் வீரர்கள் முரட்டு



ஆட்டத்துக்கு மாறினர். ஆனாலும் நடுவர் அடக்கி வாசித்தார். இதற்கு நடுவர்கள் அளவுக்கு அதிகமாக அட்டைகள் காட்டுவ தாக சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு தலைவர் (பிபா)செப்பிளாட்டர் அதிருப்தி தெரிவித்து இருந்ததும் காரணமாக இருக்கலாம். இப் போட்டியை பிளாட்டரும் காண வந்திருந்ததால் நடுவர் பெனிட்டோ வீரர் களிடம் நண்பர் போல நடந்து கொண்டார். உக்ரைன் அணித் தலைவர் ஷெவ்சென்கோ அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியும் பலன் கிடைக்கவில்லை.



60வது நிமிடத்தில் பிறிகிக் வாய்ப்பை வீணாக்கிய இவர் 67 வது நிமிடத்தில் பெனால்டி ஏரியாவுக்கு வெளியே இருந்து மின்னல் வேகத்தில் பந்தை அடித்தார். இம்முறையும் கோல் போஸ்டில் பட்டு பந்து பறந்து போனது. மறுபக்கம் சுவிட்சர் லாந் தும் வாப்புக்களை



கோட்டை விட இரண்டா வது பாதியிலும் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதையடுத்து ஆட்டம் 30 நிமிடங்கள் கூடுதல் நேரத்துக்கு சென்றது.

120 நிமிடங்களில் கோல் அடிக்கப்படாததால் இந்த உலகக்கோப்பை தொடரின் முதல்



முறையாக அதாவது 53 போட்டிகள் முடிவடைந்து 54 வது போட்டியில் முடிவு பெனால் ஷீட் அவுட் மூலம் தீர்மானிக்கப் பட்டது. இப்போது கோல்கீப்பர்கள் கையில் தான் வெற்றி இருந்தது. உக்ரைன் கோல் கீப்பர் அலெக்சாண்டர் ஷோவ்கோவ்ஸ்கி அருமையாக தடுத்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

சுவிட்சர்லாந்து சார்பில் மார்கோஸ்டலலர் பெர்னாட்டா, ரிக்கார்டோ கானபாஸ் வாய்ப்பை தவற விட்டனர். உக்ரைன் அணித் தலைவர் ஷெவ்சன்கோ கோட்டை விட்ட போதும் அர்டம் மிலவ்ஸ்கி , செர்கி ரிபரோவ் ஒலேக் குசோவ் பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்து அணிக்கு வெற்றி தேடிதந்தனர்.

கடைசிக்கட்டத்தில் பெனால்டி வாய்ப்பில் பிரான்ஸ்சஸ்கோ டோட்டி அற்புத கோல் அடிக்க இத்தாலி அணி காலுறுதிக்குள் நுழைந்தது. இப்போட்டியில் மஞ்சள் சட்டை ஒரு தடவை மாத்திரம் காட்டப்பட்டது. எனவே இப்போட்டி இத்தொடரில் சிறந்த போட்டியாக மதிப்பைப்பெற்றது.

## இத்தாலியிடம் 1-0 என்ற கோல்க்கணக்கில் தோற்ற — ஆஸி உதைபந்தாட்டத்தில் ஜெயிக்க முடியாமல்வெளியேறியது

நேற்று முன்தினம் கைசர்ஸ் லாட்டர் னில் நடந்த நொக்கவுட் முறையிலான இரண்டாம் சுற்றுப்போட்டியில் மூன்று முறை சம்பியன் இத்தாலி, அவுஸ்திரேலியா அணிகள் மோதின. ஆரம்பத்தில் அனுபவம் இல்லாத அவுஸ்திரேலியா மிரட்டியது ஆனாலும் போகப் போக இத்தாலியின் அதிரடி ஆரம்



பமானது ஆட்டத்தின் 22வது நிமிடத்தில் லூகாடோனிக்கு அருமையான வாய்ப்பு. இவர் தலையால் பந்தை முட்ட, அதை அவுஸ்திரேலிய கோல்கீப்பர் மார்க்ஸ்கவார்சர் துடிப்பாக தடுக்க வாய்ப்ப நழுவியது. 30 வது நிமிடத்தில் அவுஸ்திரேலியா அணியின் ஸ்காட் சிப்பர் பீல்டு 10 மீட்டர் துரத்தில் இருந்து சொட் அடிக்கிறார். காத்திருந்த இத்தாலி கோல்கீப்பர் கியான்லியுகி பபான் அழகாக தடுத்து சபாஷ் பெற்றார். முதல் பாதியில் இரு அணிகளும் மந்தமான ஆட்டத்தையே வெளிப்படுத்தின. நட்சத்திர இத்தாலி ஜொலிக்காதது தான் ஏமாற்றம் தந்தது. முதல் பாதி முடிவில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை. இரண்டாவது பாதி ஆரம்பமாகியதும் இத்தாலிக்கு அடி 51வது நிமிடத்தில். இந்த அணியின் நட்சத்திர வீரரான மார்க்கோ மாட்டராசி ஆஸ்திரேலியாவின் மார்க்கோ பிரசியானோவை முரட்டுத்தனமாக தடுக்க உடனடியாக சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார் . இதையடுத்து 10 பேருடன் விளையாட வேண்டிய இக்கட்டான நிலைக்கு இத்தாலி தள்ளப்பட்டது. 10 பேராக குறைந்து போனதால் இத்தாலி தற்காப்பை தகர்த்து 58வது நிமிடத்தில் மின்னல் வேகத்தில் முன்னேறினார் அவுஸ்திரேலியாவின் ஸ்காட் சிப்பர்பீல்டு இவர் அடித்த பந்தை இத்தாலி கோல்கீப்பர் கியான்லியுகி பபான் தடுத்துவிட்டார் . பின்னர் 65 வது நிமிடத்தில் இத்தாலிக்கு கிடைத்த பிறி கிக்வாய்ப்பை ஆன்ட்ரியா பிர்லோ வீணாக்கினார். இப்படி இரு அணிகளும் பந்தை பாஸ் செய்வதும் பெனால்டி ஏரியாவை நெருங்குவதுமாக இருந் தன. பினி ஷிங் திறன் இல்லாததால் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டத்தின் 74வது நிமிடத்தில் இத்தாலியின் நட்சத்திர வீரரான பிரான் சஸ்கோ டோட்டி டெல்பியரோவுக்கு பதிலாக களமிறக்கப்பட்டார்.

போட்டி முடிவுறும் நேரத்தில் இத்தாலி யின் பாபியோ கிராசோ பந்தை எடுத்துக் கொண்டு பெனால்டி ஏரியாவுக்குள் அதிவே கமாக சென்றார். அப்போது அவரை அவுஸ் திரேலியாவின் லூகா ஸ் நீல் மட க்க நடுவர் இத்தாலிக்கு பெனால்டி வாய்ப்பு அளித்தார். இப் போது பந்தை அடிக்க வருகிறார் பிரான்சஸ்கோ டோட்டி எதிரில் அவு ஸ்திரேலிய கோல்கீப்பர் மார்க்ஸ்கவாசகர் மட்டும் நிற்கிறார். டோட்டி துல்லியமாக சொட் அடிக்க பந்து வலைக்குள் செல்ல இத்தாலி 1-0 என்றகோல் கணக்கில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி காலிறுத்திக்குள் நுழைந்



தது. அவுஸ்திரேலிய அணி உதைபந்தாட் டத்தில் ஜெயிக்க முடியவில்லையே என அந் நாட்டு இரசிகர்கள் மைதானத்தில் அழுது புலம் பினர்.

### உலகக் கிண்ண துளிகள்....

★ ஈகுவடாருக்கு எதிரான 2வது சுற்று

அமிர்தன்

ஆட்டத் தில் இங்கிலாந்து 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றது. பிறிகிக் மூலம் கோல் அடித்த பெக்கம் சிறிது நேரத்தில் மைதானத்தில் வாந்தி எடுத்தார். இதை தொடர்ந்து மாற்று ஆட்டக்காரர் களம் இறக்கப்பட்டார் இங்கிலாந்து அணி யின் இந்த வெற்றியை அந்த நாட்டு பத்திரிகை கள் வெகுவாக பாராட் டி செய்தி வெளி யிட்டுள்ளன.

★ ஈகுவடார் அணி 2வது சுற்றில் இங்கிலாந்திடம் தோல்வி கண்டு வெளியேறியது. இருப்பினும் இந்த தோல்வியால் ஈகுவடார் அணியினர் வருத்தம் அடையவில்லை. 2வது சுற் றுக்கு முன்னேறியதே பெரிய விஷயம். மகிழ்ச்சியுடன் நாடு திரும்புகிறார் அந்த அணி பயிற்சியாளர் லூயிஸ் பெர்னாண்டே தெரிவித்தார்.

★ ஆர் ஜென்டினா அணி தனது 2வது சுற்று ஆட்டத்தில் கூடுதல் நேரத்தில் கோல் அடித்த மெக்சிகோவை வீழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றது. இந்த போட்டியை தொ



லைக் காட்சியில் பார்த்த டென்ஷனில் தனக்கு தசைப்பிடிப்பு ஏற்படும் நிலை உருவா னதாக ஆர்ஜென்டினாவின் முன்னணி டென்னிஸ் வீரர் டேவிட்நல்பாண்டியன் தெரிவித் துள்ளார்.

★ மெக்சிகோவுக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்ஜென்டினா அணி வெற்றிக்கான கோலை கூடுதல் நேரத்தில் அந்த அணி வீரர் மேக்ஸ் ரோட்ரிஸ் 25 மீட்டர் தூரத்தில் இருந்து இடது காலால் அருமையாக அடித்தார். இது போன்ற சிறந்த கோலை அடிக்க தனது தாத்தா சொல்லி கொடுத்த ஆட்ட நுணுக்கம் உதவியாக இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

> பிரமாணம் செய்பவன் பொய் சொல்லுவான். பொய் சொலலுபவன் திருடுவான். இவ்விரண்டும் செய்பவன் எதுவும் செய்வான்.
>
> - அப்துற்-றஹீம்

வலம்புரி

## டெனேசன் கலாசாரத்தை முறியடிக்க வேண்டும்

2007 ஆம் ஆண்டில் தரம் ஒன்றில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம் மாதம் முப்பதாம் திகதிக்குள் இவ்விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்பது நியதி.

2007 ஆம் ஆண்டில் முதலாம் தரத்தில் அனுமதிப்பதற்கான விண்ணப்ப முடிபுத் திகதி இம் மாதத்தில் முடிந்து போக ஆகஸ்ட் மாதப் பகுதியில் அனுமதிக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும்.

பெற்றோருக்கான நேர்முகத் தேர்வு , பிள்ளைகளுக்கான நேர்முகத் தேர்வு என அப்பப்பா 'அட்மிசன்' போதுமடாசாமி என்ற வெறுப்பை ஏற்படுத்திவிடும்.

இவையெல்லாவற்றிலும் சித்திபெற்றாலும் அனுமதி கிடைத்துவிடும் எனக் கூறிவிடமுடியாது.

மாறாக 'டொனேசன்' அதில் யார் வெற்றி பெறுகின்றார்களோ அவர்களின் பிள்ளைகளுக்கு அனுமதி கிடைக்கும்.

பாடசாலை நிர்வாகம் டெனேசன் கேட்பதாக காட்டிக் கொள்ளாமல் கனகச்சிதமாக டெனேசன் பெற்றுக் கொள்ளும் நாடகத்தை அரங்கேற்றும்.

அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் என தலைப்பா கட்டிய தலைகள்.

ஐயா! இந்தியப் பஞ்சாயத்திலும் இப்படியான தலைகளைக் காணமுடியாது. ஐம்பதினாயிரம் ரூபாவிலிருந்து ஆரம்பிப்பார்கள். யார் கூடிய விலை கொடுக்கின்றார்களோ அவர்களுக்கே தரம் ஒன்றுக்கான அனுமதி கிடைக்கும்.

இதில் வேடிக்கைஎன்னவெனில் கடந்தவருடம் யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடிய ஒரு ஆரம்ப பாடசாலையில் ஒரு விசித்திரமான அனுமதி நடந்தது.

அனுமதி நிராகரிக்கப்பட்டு மீண்டும் மனுத் தாக்கல் செய்த பெற்றோர்களுக்கிடையே ஒரு போட்டி. இருக்கின்ற அனுமதியோ மிகக் குறைவு. எனவே யார் அதிகளவு டெனேசன் கொடுக்கின்றார்களா அவர்களுக்கே அனுமதி வழங்கப்படும். இதுவே போட்டி நிபந்தனை.

என்ன செய்வது தாலியை விற்றாவது கொடுத்து பிள்ளையைப் படிப்பிப்போமே என்ற முடிபில் நாற்பது, ஐம்பதாயிரம்என பெற்றோர்கள் ஏலம் கூறினர். எப்படியிருக்கின்றது நம் கல்வி நிர்வாகம்?

பாடத்திட்டம், வேலைத் திட்டம், பாடக் குறிப்பென அக்குவேறு ஆணி வேறாக சோதனை நடத்தும் கல்வித் திணைக்களங்களின் கண்களுக்கு இது மட்டும் தெரியாமல் இருப்பது ஏன்?

அட நீங்கள் வேறு. 'அதிபர்! இக் கடிதம் கொண்டு வருபவரின் பிள்ளைக்கு தரம் ஒன்றில் அனுமதி வழங்கவும்' என்ற கடிதம் வலயங்களிலிருந்து எழுதப்படுகிறதே! அப்படியானால் எப்படி? யார்? டெனேசனைத் தடுப்பது?

# இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும்

## இந்தியா மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சகல இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்வு பேச்சுவார்த்தை மூலம் காணப்படவேண்டும்.

இதுவே இந்தியாவின் நிலைப்பாடாகும் என்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திருமதி நிருபமா ராவ் தெரிவித்தார்.

இந்தியப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர்வதற்காக கலாசார தொடர்புகளுக்கான இந்திய கவுன்சிலினால் இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில்,

கலந்து கொண்ட திருமதி நிருபமாராவ் அங்கிருந்த கொழும்பு ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில்,

இலங்கையில் நாளுக்கு நாள்வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றது . அப்பாவி மக்களே இந்த வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது தமிழகத்துக்கு வரும் ஈழ அகதிகள் மூலம் உணரமுடிகிறது எனவே நிரந்தர சமாதானம் ஒன்றை காண பேச்சுவார்த்தை உடனே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றார். (க)

# குலதுங்க மீதான தாக்குதலுக்கு கண்காணிப்புக்குழு கண்டனம்!

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் பரமி குலதுங்காவை குறிவைத்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டு தாக்குதல் சமாதான முன்னெடுப்புக்களுக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாகும் என்று இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஓமர்ஸன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க உட்பட நால்வர் உயிரிழந்தமையையிட்டு கண்காணிப்புக் குழு தனது கவலையையும் அனுதாபங்களையும் தெரிவிப்பதோடு இத் தாக்குதல் சம்பவத்தை மிகவும் வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

வன்முறைகள் தீர்வுகளைத் தராது என நாம் பலமுறை கூறியுள்ளோம் இப்போதும் அதையேதான் நாம் கூறுகின்றோம் . வன்முறைகளை உடனடியாக நிறுத்துங்கள் என்பதே இவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினருக்குநாம் கூறும் செய்தியாகும்.



இந்தத் தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரிகள் யார் என எம்மால் இப்பொழுது எவரையும் சுட்டிக்காட்ட முடியாது படைத்தரப்பும் அரசாங்கமும் புலிகளே இதற்கு காரணம் என குற்றஞ்சாட்டினாலும் எம்மால் உடனடியாக உறுதியாக இவர்கள் தான் இதனை செய் தார்கள் என கூறமுடியாது.

நாம் எமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம் தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு சில நிமிடநேரத்திற்குள் நாம் விரைந்து சென்றோம். எமது விசாரணைகள் முடிவில் எமது அறிக்கையை இத்தாக்குதல் குறித்து வெளியிடு வோம்.

இவ்வாறான யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் மீண்டும் இந்நாட்டை ஒரு யுத்தத்தை நோக்கியே நகர்த்திக்கொண்டிருக்கின்றன. (க)

## இந்து தர்மாசிரியர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் திடீரென பிரகடனப்படுத்தப்பட்ட கர்த்தால் காரணமாக போக்குவரத்துச் சேவைகள் முற்றாக ஸ்தம்பித்துப்போனதால் ஏராளமான யாழ்ப்பாண பரீட்சார்த்திகள் தோற்ற முடியாது போயுள்ளது.

அப்பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து மிக சொற்ப எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் மாத்திரமே தோற்றியிருந்த னர்.

பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இவ்விடயத்தை சமூக சேவை, சமூகநலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே. நாகராசாவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து அவர் அதனை கொழும்பு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக் கரசனின் கவனத்திற்குகொண்டு வந்ததையடுத்து அவர் இவ்விடயத்தை பரீட்சை ஆணையாளருடன் கலந்து பேசி முடிவெடுப்பதாக தெரிவித்துள்ளார் எனத்தெரிகிறது. (து-133)

## பன்னிப்பிட்டிய தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம்

(கொழும்பு)

பன்னிப்பிட்டியாவில் இடம்பெற்ற தற்கொலைத்தாக் குதல் சம்பவத்திற்குஐக்கியநாடுகள்சபை கண்டனம்தெரிவித் துள்ளது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானின் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான வன்செயல்களை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என்றும் கோபி அனானின் பேச்சாளர் தெரிவித் துள்ளார்.

நோர்வேயின் அனுசரணையுடன் மீண்டும் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க அரசும் புலிகளும் முன்வரவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் அவர் கேட்டுக்கொண் டுள் ளார்.(க-7)

# அரசும்-விடுதலைப்புலிகளும் விரும்பினால் எந்த நாடும் மத்தியஸ்தம் வகிக்கலாம்!



## என்கிறார் ஐ.தே.க.வின் பிரதிச்செயலாளர்

(கொழும்பு)

நோர்வேயை விடுத்து விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் ஏற்றுக் கொள்கின்ற எந்த நாடாவது இலங்கையின் சமாதான செயற்பாடுகளில் மத்தியஸ்தராக செயற்பட முன்வந்தால் அதற்கு ஐ.தே.க. எதிர்ப்புத்தெரிவிக்காது என்று கட்சியின் பிரதிப்பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தொடர்பாக ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமைகுறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளின் உறுப்பினர்கள் போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவில் இடம் பெறக் கூடாது என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, நோர்வேயின் பிரஜை ஒருவர் போர் நிறுத்த கண் காணிப்புக்குழுவின் தலைவராக வரக்கூடாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளதாக அறிகின்றோம்.

அப்படியானால் இதற்கு தீர்வு தான் என்ன நோர்வே நாட்டைச் சேர்ந்தவர் கண்காணிப்புக்குழுவின் தலைவராக வரக் கூடாது என்றால் அரசாங்கமும் புலிகள் இயக்கமும் விரும்பும் வகையில் யார் இருக்கிறார்கள் எந்த நாடு உள்ளது -

இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப் பாட்டை வெளியிடவேண்டும் ஆனால் அரசாங்கம் கூறு வதனை நம்பமுடியாமல் உள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நோர்வேயை விமர்ச்சித்த, அரசாங்க உறுப்பினர்கள் இன்று நோர்வே பாரிய சேவையை செய்துள்ளது என்று கூறுகின்றனர். (க)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஏதாவது ஒன்றின் மீது சிறிதளவு நீங்கள் ஆசை வைத்தாலும் மனம் உங்களைத் தனது இஷ் டப படி அலைக்கழிக்க வைப்பதற்கு வழி உண்டாகி விடும் பிறகு நீங்கள் அதன் அடிமை ஆகிவிடுவீர்கள் இந்த நிலை பற்றுகளை விட்டு விட்டவர்களுக்கு ஏற்படுவதில்லை.

# இராணுவத் தாக்குதல் தொடர்ந்தால் மாணவர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிவரும்

## மாணவர் படை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மாணவர்கள்மீது இராணுவத்தின் தாக்குதல்கள் தொடர்ந்தால் அவர்கள்மீது மாணவர்கள் தாக்குதல் நடத்த நேரிடும் என மாணவர் படை என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.இது தொடர்பாக இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அவ் அமைப்பு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாணவர்கள் மீதும் கல்விச்சாலைகள்மீதும் இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குமாறாக உயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவ முகாம்கள், காவலரண்கள் என எமது கல்விச்சாலைகள் தோறும் 'குந்தியிருந்து கொண்டு கற்றல் செயற்பாட்டிற்கு தடையாக இருக்கும் படைகள் பல்கலைக்கழக மாணவர்கள்,பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் மீதும் தமது காட்டுமிராண்டித்தனத்தை காட்டத் தொடங்கிவிட்டனர்.

பல மாணவர்கள் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர். பல மாணவர்கள் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். மாணவர் இருப்பிடங்கள் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவாகிய தங்களுக்கும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் நீதித்துறையினருக் கும் நாம் பலமுறை தெரியப்படுத்திய போதும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. இதன் காரணமாக நாம் பெரும் உடல்,உளவியல் பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருகின்றோம்.

இராணுவத்தினர் பல்கலைக்கழகம், பாடசாலைகள் ,உயர் கல்வி நிறுவனங்கள் என அனைத்து இடங்களிற்குள்ளும் ஆயுதங்கள் சகிதம் உள்நுழைந்து மாணவர்களை அச்சுறுத்தி வருகின்றனர்.தமது காட்டு மிராண்டித்தனத்தைக் காட்டிவருகின்றனர்.

எனவே இராணுவத்தினருக்கு கடுமையாக எச்சரிக்கின்றோம். நாம் மாணவர்கள் என்ற நிலை மாறி எமது கைகள் குண்டுகள் ஏந்துமானால் அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை சுட்டிக்காட்டுகின்றோம்.

எனவே இது தொடர்பாக உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தின் பிரதிகள் மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் , யாழ்.மாவட்ட நீதிமன்றப் பதிவாளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஆழ ஊடுருவும் படைப்பிரிவுக்கு லெப்.ஜெனரல் குலதுங்க ஆலோசகர்

(கொழும்பு)

தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த பிரதிஇராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பரமி குலதுங்க இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படைபிரிவுக்கு தேவையான ஆலோசனைகளையும் தகவல்களையும் வழங்கி அதனை நடத்தியும் வந்தவர் என்று பாதுகாப்புத்துறையை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆழ ஊடுருவும் படைப்பிரிவுடனும் இராணுவ புலனாய்வுத்துறையுடனும் நெருக்கமான தொடர்புகளை வைத்து செயல்பட்ட குலதுங்கவுக்கு கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

அவரது நடமாட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. வன்னிப் பெருநிலப்பரப்பு உட்பட விடுதலைப்புலிகளின் நிர்வாக பிரதேசத்திற்குள் ஆழ ஊடுருவும் படையணியினரின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்திருந்தன.

புலிகளின் பகுதிகளுக்குள் இந்தப் படையணி புகுந்து கிளைமோர்த்தாக்குதல்களை நடத்தியது. இதில் புலிகளின் தளபதிகள், போராளிகள் சிக்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# திருமலையில் மூன்று தமிழர்களை காணவில்லை என முறைப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலையில் கால்நடைகளைத் தேடியும் விறகு வெட்டவும் காட்டுப் பகுதிக்குச் சென்ற அப்பாவிப் பொதுமக்கள். மூவர் மர்மமானமுறையில் காணாமல் போயுள்ளார்கள்.

திருகோணமலை சேருவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி பாரதிபுரத்தில் தமது கால்நடைகளைக் காணவில்லையென்று ஆதியம்மன்கேணி காட்டுப் பகுதிக்குச் சென்ற மூன்று விவசாயிகளைக் நேற்று முன்தினம் காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

கிளிவெட்டி பாரதிபுரத்தைச் சேர்ந்தவர்களான இரண்டு பிள்ளைகளின் தந்தையான நல்லதம்பி ஞானேஸ்வரன் (வயது-46), நான்கு பிள்ளைகளின் தந்தையான பத்தக்குட்டி திரவியராஜா(வயது-40), கிளிவெட்டி லிங்கபுரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான அம்பலவாண பிள்ளை சதாசிவம்(வயது-45) ஆகியோரே காணாமல் போனவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அந்தணர்களுக்கு அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

இந்துக் கலாசாரத்திணைக்களத்தினால் அந்தணர்களுக்கான விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோர் இன்று இந்து கலாசாரத் திணைக்களம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதுவரையும் விண்ணப்பிக்காதோரும் இன்றையதினம் வந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து கொள்வதற்கு வலிகாமம் பிரதேச இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் ஏற்பாடு செய்துள்ளார். (கு)

# அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இதுவரை ஒலிப்பேழை, தாளம் புத்தகம் பெறாத அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு வலிகாம இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் கேட்டுள்ளார். (கு)

# ஐந்து போராளிகளின் வீரச்சாவு அறிவித்தல்

## புலிகள் நேற்று வெளியிட்டனர்

தமிழீழக் கடற்பரப்பில் இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்த ஐந்து போராளிகளின் விபரங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று வெளியிட்டனர்.

20.05.2006 அன்று தமிழீழக் கடற்பரப்பில் கடற்படையினருடனான மோதலின் போது நான்கு போராளிகள் வீரச் சாவடைந்துள்ளனர்.

லெப்.கேணல் நளா (நடராசா கவிதா ,4 ஆம் வட்டாரம் புங்குடுதீவு, யாழ்ப்பாணம்) தற்காலிக முகவரி:- குளத்தடி விசுவமடு,கிளிநொச்சி).

லெப்.கேணல் புரட்சிநிலவன்(வைரமுத்து வசீகரன் ஆழியவளை தாளையடி, யாழ்ப்பாணம்)

மேஜர் கடல்வீரன் (துவீது- விமலதாஸ், முள்ளியான், வெற்றிலைக்கேணி)

மேஜர் வஞ்சி/வஞ்சியின்மன்(புஞ்சாட்சரம் குணசீலன் பாடசாலை வீதி, அனிஞ்சியன்குளம்,மல்லாவி)

23.03.2006 அன்று தமிழீழக் கடற்பரப்பில் கடற்படையினருடன் இடம்பெற்ற மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

லெப்.கேணல் தமிழ்முரசு(கஜீந்திரன் மரியாம்சேய் ஜோர்ஜ்பிரசாத் சுதர்ஷன், கீரியன் தோட்டம் சில்லாலை,பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்) (தற்காலிக முகவரி:- கனகபுரம் கிளிநொச்சி). (ச-5)

# திருமலையில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு

(திருகோணமலை)

யாழ்.குடாநாட்டில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் மீதானதாக்குதல்கள், தமிழர் தாயகப் பகுதிகளில் அப்பாவி மக்கள் மீதுமேற்கொள்ளப்பட்டு வரும் அராஜகங்கள் மற்றும் அல்லைப்பிட்டி வங்காலைப் பகுதிகளில் பச்சிளம்குழந்தைகள் உள்ளிட்ட அப்பாவி மக்கள்மீதான படுகொலைகளைக் கண்டித்தும் இன்று திருகோணமலை மாவட்டத்தில் முழுஅடைப்பு நடத்தப்படவுள்ளது.

வணிக நிலையங்களை மூடியும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுவோர் தமது பணிகளைப் புறக்கணித்து பொதுப் போக்குவரத்துச் சேவைகளை முடக்கியும் இந்தப் போராட்டதிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறுஅழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## வல்லிவெட்டித்துறையில் இளைஞன் சுட்டுக்கொலை

வல்லிபுரம் பரியாரியார் ஒழுங்கையில் வைத்து இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.நேற்று மாலை 6.30 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் சாரதியான ஜெயா என தெரியவருகின்றது. இவரது சடலம் அதே இடத்தி லேயே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது (ச-5)

## பழைய...

கொல்வதை அனுமதிக்க வேண்டாமென மகிந்த ராஜபக்ஷவிற்கு வேண்டுகோள் விடுத்ததை மேற்கோள் காட்டியதோடு இந்தியாவின் இவ்வாறான ராஜதந்திரத் தலையீடே இன்றைய நிலையில் எமது மக்களை பாதுகாக்கத்தேவையானது எனவும் தெரிவித்தார். (ச-5)

## திருமலையில்...

நேற்றுக் காலை 7.30 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

துணை இராணுவக் குழுவினரின் தாக்குதலை முறியடித்து பதில் தாக்குதலை நடத்திய போதே போராளி வீரச்சாவடைந்ததாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

அப் பகுதியில் நீண்ட நேரமாக துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர். (ச-5)

## பிரச்சினையை...

அத்தநாயக்க பொது மக்களின் பாதுகாப்பில் இருந்து அரசு தவறியிருப்பதாக குற்றஞ் சுமத்தியுள்ளார்.

சமாதான முயற்சிகளை அரசு சீராகக் கொண்டுசெல்ல முடியாவிட்டால் குறைந்தது போர்நிறுத்த உடன்படிக்கையாவது பாதுகாக்க வேண்டும். அல்லது வேறு நடவடிக்கைகளையாவது மேற்கொள்ளவேண்டுமெனவும் திஸ்ஸ அத்தநாயக்க கோரியுள்ளார். (ச-5)

## தமிழக முதல்வர் கருணாநிதிக்கு ...

இலங்கையில் இராணுவம் முன்னைய காலம் போல் குழந்தைகள், பெண்கள் என பாரபட்சம் பாராது பொதுமக்களைக் கொன்று அழிக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடம் குறிப்பாக தமிழ் நாட்டில் வாழும் தமிழ் மக்களிடம் அனுதாப உணர்வு எழுச்சி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ் நாடும் இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுக்க வேண் டிய நிலை உருவாகியுள்ளது.

'தனிப்பட்ட நலன்கள் அடிப்படையில் பார்த்தால் விடுதலைப்புலிகளுக்கும் தி.மு.க அரசுக்கும் உறவுகள் நெருக்கமாக இருக்காது. ஆனால் மக்கள் நலன் வலுவாக கட்டியெழுப்பப்படும்போது நிச்சயம் நாங்கள் நட்புக் கரம் நீண்டுவோம்' என தெரிவித்துள்ளார்.

அமைதிப் பேச்சை நடத்த இந்தியா செல்லவும் தயார் என விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் குறிப்பிட்டதைப் பற்றி கேட்டபோது,

இந்தியா விடுதலைப்புலிகளுக்கு தடை விதித்திருக்கும் பட்சத்தில் நாங்கள்அங்கு செல்ல வாய்ப்பில்லை. ஆனால் நிலைமைகள் மாறும் வாய்ப்புள்ளது என தமிழ்ச்செல்வன் அச் செவ்வியின்போது குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள அரசுக்கு ஆதரவளிப்பதை இந்தியா நிறுத்த வேண்டும். தங்களது அடிப்படை உரிமைக்காகப் போராடும் தமிழர்களின் கோரிக்கைகளை தார்மீக ரீதியாக இந்தியா ஆதரிக்க முடியாது என கூற முடியாது.

பல சந்தர்ப்பங்களில் இந்தியா உதவியுள்ளது. குறிப்பாக பங்களாதேஷ் போராட்டத்தை ஆதரித்து உதவியுள்ளது.

இந்திய அரசாங்கம் எங்கள் விடுதலைப் போராட்டத்தை ஏற்று அங்கீகரிப்பதுடன் எங்களுக்கு அதன் தார்மீக ஆதரவை வழங்க வேண்டும். இலங்கையரசின் அட்டூழியங்களைக்கண்டிக்க வேண்டும். இதுவே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடும் விரும்பமுமாகும் என்றார் தமிழ்ச்செல்வன்.

இலங்கை அரசாங்கத்தின் நயவஞ்சகச் செயலை இந்தியா உள்ளிட்ட அனைத்துலக சமூகமும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த நாள் வந்தே தீரும்.

ஈழத் தமிழ் மக்களுக்கு கூடிய விரைவில் நல்ல வழி பிறக்கும்என்று சு.ப.தமிழ்ச்செல்வன் அச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.(ச-5)

வைத்தியம்
ஆண்மைக் குறைவு, அஸ்மா , வாதம் மற்றும் மாதவிடாய் சம்பந்தமான நோய்களுக்கு விசேட சிகிச்சைகள். தொடர்புகளுக்கும் பதிவுகளுக்கும்:- 0779623307
காலை 6 மணி - காலை 9மணி வரை தொடர்பு கொள்ளவும்.




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.